**<u>ம.அ.1.ந.க.எண்.எப்1/3103/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 18.09.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.442/2012 **பொருள் எண்.1**

**<u>திருவெற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள மகப்பேறு மையம், நலவாழ்வு மையம் மற்றும் மருந்தக கட்டிடம் இடிப்பதற்கு அனுமதி</u>**

| வார்டு–11 | மண்டலம்–1 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | புதிய மண்டலம்–1, வார்டு–11 திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் நகராட்சி மருத்துவமனை வளாகத்தில் உள்ள மகப்பேறு மையம், நலவாழ்வு மையம் மற்றும் மருந்தக கட்டிடம் இடிக்க அனுமதி. |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை (ம) வருடம் | திருவொற்றியூர் நகராட்சியால் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. |
| பரப்பளவு தளம் வாரியாக | 360 ச.மீ |
| கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு | 1364 ச.மீ |
| தற்போதய புத்தக மதிப்பு | ரூ.22,320.00 |
| கட்டிடம் தற்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | திருவெற்றியூரில் புதியதாக அவரச கால பிரசவ (E.O.C.) கட்டிடம் கட்டுவதற்கு. |
| இடிப்பதற்கு அவசியம் என்ன? | பழைய கட்டிடம் இடியும் நிலையில் உள்ளது |
| பரிந்துரை செய்தவர் | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 1வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.31 நாள்–30.07.2012 |

எனவே, மண்டலம்–1, வார்டு–11ல் திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் நகராட்சி மருத்துவமனை வளாகத்தில் உள்ள மகப்பேறு மையம், நலவாழ்வு மையம் மற்றும் மருந்தக கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘12.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.33/2012, நாள் 12.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 253/2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.4 ந.க.எண்.அ2/3291/2012**
**ஆணையாளர் அவர்களின்18.06.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.443/2012 **பொருள் எண்.2**

**பழுதடைந்து கட்டிடங்களை இடிக்க அனுமதி.**

| வ. எண் | வார்டு எண்.43 | மண்டலம் 4 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–4, பகுதி–10, வார்டு–43ல் தொற்றுநோய் மருத்துவமனை வளாகத்தில் உள்ள பழுதடைந்த கட்டிடங்களை இடிப்பதற்கான அனுமதி. |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ?<br>• ஆர்.எம்.ஓ விடுதி (நுழைவுவாயில் அருகில் தெற்கு பக்கம்)<br>• செவிலியர் கண்காணிப்பாளர் விடுதி (நுழைவுவாயில் அருகில் வடக்கு பக்கம்)<br>• மருத்துவ ஆய்வுக்கூடம் (தொற்று நோய் மருத்துவமனை வளாகத்தின் மேற்கு பக்கம்)நவீன சமையற்கூடம் | • 1914<br>• 1914<br>• 1965<br>• 2005 |
| 2 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 1)289.5 ச.மீ. தரைதளம்<br>2)115.4 ச.மீ. தரைதளம்<br>3)199.2 ச.மீ. தரைதளம் மற்றும் முதல் தளம்<br>4)224 ச.மீ. தரைதளம் |
| 3 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 1)289.5 ச.மீ. தரைதளம்<br>2)115.4 ச.மீ. தரைதளம்<br>3)199.2 ச.மீ. தரைதளம் மற்றும் முதல் தளம்<br>4)224 ச.மீ. தரைதளம் |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு முறையே | ரூ.13275.00<br>ரூ.4952.00<br>ரூ.36852.00<br>ரூ.17,15,175.00 |
| 5 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 6 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | சாலையை அகலப்படுத்த. |
| 7 | இதை இடிப்பதற்கு அவசியம் என்ன ? | சிதிலமடைந்த கட்டிடங்கள் என்பதாலும் நவீன சமையற்கூடம், புதிய தொற்று நோய் மருத்துவமனையின் பார்வைக்கு இடையூராக உள்ளதால். |
| 8 | இதை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| 9 | வார்டு குழு தீர்மான எண் | பெறப்படவுள்ளது. |

எனவே, மேற்கண்ட கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழுக்கள் (சுகாதாரம் மற்றும் பணிகள்) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண். 36/2012 நாள் 12.10.2012–ன்படி இதற்கு வார்டுக்குழு தீர்மானம் பெறப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.256/2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.8.ந.க.எண்.பி2/8065/2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின்08.09.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.444/2012 **பொருள் எண்.3**

**<u>பொதுக்கழிப்பிட கட்டடம் இடிக்க அனுமதி.</u>**

| வ.எண் | வார்டு எண்.108 | மண்டலம் 8 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–8, பகுதி–22, வார்டு–108 எம்.எம்.டி.ஏ. பேருந்து நிலையத்தின் உட்புறம் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1988 ஆம் வருடம் |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 23.50 ச.மீ. தரைதளம் (253 சதுரடி) |
| 3 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 46.50 ச.மீ. |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு முறையே | ரூ.7,064.00 |
| 5 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 6 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதியதாக நவீன பொதுக்கழிப்பிடம் கட்டுவதற்கு |
| 7 | இதை இடிப்பதற்கு அவசியம் என்ன ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது |
| 8 | இதை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| 9 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 8வது மண்டலம் வார்டு குழு தீர்மான எண்.10 நாள்11/01/2012 |

எனவே, மண்டலம்–8, பகுதி–22, வார்டு–108 எம்.எம்.டி.ஏ. பேருந்து நிலையத்தின் உட்புறம் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடத்தை இடித்து விட்டு புதியதாக நவீன பொதுக்கழிப்பிடம் கட்டுவதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.41/2012, நாள் 12.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.264/2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.8 ந.க.எண்.பி2/8085/2012**
**ஆணையாளர் அவர்களின்18.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.445/2012 **பொருள் எண்.4**

**பொதுக்கழிப்பிட கட்டடம் இடிக்க அனுமதி.**

| வ.எண் | வார்டு எண்.103 | மண்டலம் 8 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–8, பகுதி–23, வார்டு–103 ராணி அண்ணா நகரில் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1995 ஆம் வருடம் |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 67 ச.மீ. தரைதளம் |
| 3 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 79 ச.மீ. |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு முறையே | ரூ.3,472.37 |
| 5 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 6 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதியதாக பொதுக்கழிப்பிடம் கட்டுவதற்கு |
| 7 | இதை இடிப்பதற்கு அவசியம் என்ன ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது |
| 8 | இதை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| 9 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 8வது மண்டலம் வார்டு குழு தீர்மான எண்.42 நாள்30/03/2012 |

எனவே, மண்டலம்–8, பகுதி–23, வார்டு–103 ராணி அண்ணா நகரில் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடத்தை இடிக்க நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.43/2012, நாள் 12.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

‘‘17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.266/2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.8.ந.க.எண்.பி2/8086/2012**
**ஆணையர் அவர்களின் 18.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.446/2012 **பொருள் எண்.5**

**விழா மேடை கட்டடம் இடிக்க அனுமதி**

| வார்டு–104 | மண்டலம்–8 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | கங்காதீஸ்வரர் கோவில் இரண்டாவது சந்தில் உள்ள விழா மேடை |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை (ம) வருடம் | புதிய மண்டலம் – 8 (பழைய மண்டலம் –5) வருடம் 1998–1999 |
| பரப்பளவு | 14 ச.மீ. |
| தற்போதய புத்தக மதிப்பு | ரூ. 97,976.00 |
| கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | உபயோகமின்றி பழுதடைந்து உள்ளது. |
| பரிந்துரை செய்தவர் | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 8வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.56 நாள்–30.07.2012 |

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள விழா மேடையை இடித்து அகற்றி தருவதற்காக நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.258/2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.அ.8 ந.க.எண்.பி2/8087/2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின்08.09.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.447/2012 **பொருள் எண்.6**

**<u>பொதுக்கழிப்பிட கட்டடம் இடிக்க அனுமதி.</u>**

| வ.எண் | வார்டு எண்.104 | மண்டலம் 8 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–8, பகுதி–23, வார்டு–104 புல்லாரெட்டி புரத்தில் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1992ஆம் வருடம் |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 60 ச.மீ. தரைதளம் |
| 3 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 86 ச.மீ. |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு முறையே | ரூ.3,325.00 |
| 5 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 6 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு |
| 7 | இதை இடிப்பதற்கு அவசியம் என்ன ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது |
| 8 | இதை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| 9 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 8வது மண்டலம் வார்டு குழு தீர்மான எண்.54 நாள்30/07/2012 |

எனவே, மண்டலம்–8, பகுதி–23, வார்டு–104 புல்லாரெட்டிபுரத்தில் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடத்தை இடித்து விட்டு புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.40/2012, நாள் 12.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.263/2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.8.ந.க.எண்.பி2/8088/2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின்08.09.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.448/2012 **பொருள் எண்.7**

**<u>பொதுக்கழிப்பிட கட்டடம் இடிக்க அனுமதி.</u>**

| வ.எண் | வார்டு எண்.104 | மண்டலம் 8 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–8, பகுதி–23, வார்டு–104ல் பூபதி நகர் 11வது தெரு எதிரில் உள்ள பொதுக்கழிப்பிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 2000 ஆம் வருடம் |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 32 ச.மீ. தரைதளம் |
| 3 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 45 ச.மீ. |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு முறையே | ரூ.4016.00 |
| 5 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 6 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | பொதுக்கழிப்பிடம் |
| 7 | இதை இடிப்பதற்கு அவசியம் என்ன ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது |
| 8 | இதை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| 9 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 8வது மண்டலம் வார்டு குழு தீர்மான எண்.56 நாள்27/08/2012 |

எனவே, மண்டலம்–8, பகுதி–23, வார்டு–104, ல் பூபதி நகர் 11வது தெரு எதிரில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடித்துவிட்டு புதியதாக நவீன கழிப்பிடம் கட்டுவதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.37/2012, நாள் 12.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

‘‘17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.260/2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.8.ந.க.எண்.பி2/8089/2012**
**ஆணையாளர் அவர்களின்18.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.449/2012 **பொருள் எண்.8**

**பொதுக்கழிப்பிட கட்டடம் இடிக்க அனுமதி.**

| வ.எண் | வார்டு எண்.104 | மண்டலம் 8 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–8, பகுதி–23, வார்டு–104ல் திடீர் நகர் பின்புறம் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1998ஆம் வருடம் |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 144 ச.மீ. தரைதளம் |
| 3 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 162 ச.மீ. |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு முறையே | ரூ.8,038.48 |
| 5 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 6 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | உடற்பயிற்சி கூடம் கட்டுவதற்கு |
| 7 | இதை இடிப்பதற்கு அவசியம் என்ன ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது |
| 8 | இதை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| 9 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 8வது மண்டலம் வார்டு குழு தீர்மான எண்.53 நாள்30/07/2012 |

எனவே, மண்டலம்–8, பகுதி–23, வார்டு–104ல் திடீர் நகர் பின்புறம் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடத்தை இடித்து விட்டு புதியதாக உடற்பயிற்சி கூடம் கட்டுவதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.39/2012, நாள் 12.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

‘‘17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.262/2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.8.ந.க.எண்.பி2/8090/2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின்08.09.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.450/2012 **பொருள் எண்.9**

**<u>பொதுக்கழிப்பிட கட்டடம் இடிக்க அனுமதி.</u>**

| வ.எண் | வார்டு எண்.104 | மண்டலம் 8 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–8, பகுதி–23, வார்டு–104 சாஸ்திரி நகர் மெயின் தெருவில் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1992ஆம் வருடம் |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 67 ச.மீ. தரைதளம் |
| 3 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 79 ச.மீ. |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு முறையே | ரூ.3,072.00 |
| 5 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 6 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதியதாக உடற்பயிற்சி கூடம் கட்டுவதற்கு |
| 7 | இதை இடிப்பதற்கு அவசியம் என்ன ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது |
| 8 | இதை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| 9 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 8வது மண்டலம் வார்டு குழு தீர்மான எண்.55 நாள்30/07/2012 |

எனவே, மண்டலம்–8, பகுதி–23, வார்டு–104 சாஸ்திரி நகர் மெயின் தெருவில் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடத்தை இடித்து விட்டு புதியதாக உடற்பயிற்சி கூடம் கட்டுவதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.42/2012, நாள் 12.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.265/2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.8.ந.க.எண்.பி2/8091/2012**
**ஆணையர் அவர்களின் 18.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.451/2012 **பொருள் எண்.10**

**சமையல் கூட கட்டடம் இடிக்க அனுமதி**

| வார்டு–104 | மண்டலம்–8 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | லெட்டாங்க்ஸ் சாலையில் உள்ள சத்துணவு கூடம் |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை (ம) வருடம் | புதிய மண்டலம் – 8 (பழைய மண்டலம் –5) வருடம் 1982–1983 |
| பரப்பளவு | 131 ச.மீ. |
| தற்போதய புத்தக மதிப்பு | ரூ.7841.00 |
| கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | உபயோகமின்றி பழுதடைந்து உள்ளது. |
| பரிந்துரை செய்தவர் | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 8வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.52 நாள்–30.07.2012 |

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள சத்துணவு கூடத்தை இடித்து அகற்றிய பின்னர் புதியதாக மாமன்ற உறுப்பினர் அலுவலகம் மற்றும் இளநிலை பொறியாளர் அலுவலகம் கட்டுவதற்காக நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.257/2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.அ.8.ந.க.எண்.பி2/8150/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 18.09.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.452/2012 **பொருள் எண்.11**

**<u>பாலவாயல் சாலை சென்னை மேல்நிலைப்பள்ளியிலுள்ள சமையல் கூட கட்டிடம் இடிக்க அனுமதி</u>**

| வார்டு 96 | புதிய மண்டலம்–8 (பழைய மண்டலம்–4) |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | சென்னை மேல்நிலைப் பள்ளியிலுள்ள கல்நாரினால் வேயப்பட்ட சமையற்கூடம் |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | புதிய மண்டலம்–8 (பழைய மண்டலம்–4) வருடம் 1989–1990 |
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக | தரை தளம்–49.00 ச.மீ |
| இந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு | 60ச.மீ |
| இந்த கட்டிடம் இப்போது பயன் பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.2,949.50 |
| அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | புதியதாக வகுப்பறைகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்து உள்ளது |
| இதை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 8வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.51, நாள்.30.07.2012 |

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள கல்நாரினால் வேயப்பட்ட சமையற்கூடத்தை இடித்து அகற்றிய பின்னர் புதியதாக வகுப்பறைகள் கட்டுவதற்காக நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“15.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.67/2012, நாள் 15.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

‘‘17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.276/2012 நாள்.17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.8.ந.க.எண்.பி2/8194/2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின்17.09.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.453/2012 **பொருள் எண்.12**

**<u>பொதுக்கழிப்பிட கட்டடம் இடிக்க அனுமதி.</u>**

| வ.எண் | வார்டு எண்.95 | மண்டலம் 8 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–8, பகுதி–21, வார்டு–95 எம்.டி.எச். சாலையில் (ஐ.சி.எப் அனெக்ஸ் சந்து) உள்ள பழுதடைந்த பொதுக் கழிப்பிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1998ஆம் வருடம் |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 24.14 ச.மீ. தரைதளம் |
| 3 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 37 ச.மீ. |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு முறையே | ரூ.8,200.00 |
| 5 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 6 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | பொதுக்கழிப்பிடம் |
| 7 | இதை இடிப்பதற்கு அவசியம் என்ன ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது |
| 8 | இதை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| 9 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 8வது மண்டலம் வார்டு குழு தீர்மான எண்.57 நாள்27/08/2012 |

எனவே, மண்டலம்–8, பகுதி–21, வார்டு–95, ல் எம்.டி.எச். சாலையில் (ஐ.சி.எப் அனெக்ஸ் சந்து) உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடம் இடிக்க நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘12.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.38/2012, நாள் 12.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.261/2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ8.ந.க.எண்.பி2/8195/2012**
**ஆணையர் அவர்களின் 17.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.454/2012 **பொருள் எண்.13**

**தெற்கு மாட வீதியில் உள்ள சத்துணவு கூட மைய கட்டிடம் (மைய எண்.479,480) இடிக்க அனுமதி**

| | |
|---|---|
| வார்டு 95 | புதிய மண்டலம்–8 (பழைய மண்டலம்–5) |
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | தெற்கு மாட வீதியில் உள்ள சத்துணவு கூட மைய கட்டிடம் (மைய எண்.479, 480) |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | புதிய மண்டலம்–8 (பழைய மண்டலம்–5) சுமார் 30 வருடங்களுக்கு முன்பு |
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக | தரை தளம்–47.45 ச.மீ |
| இந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு | 58.85ச.மீ |
| இந்த கட்டிடம் இப்போது பயன் பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை. |
| தற்போதைய புத்தக மதிப்பு | ஏதுமில்லை |
| அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | சிறுவர் விளையாட்டுத் திடல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது |
| இதை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 8வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.58, நாள்.27.08.2012 |

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த சத்துணவு கூட மைய கட்டடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“15.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.66/2012, நாள் 15.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 275 / 2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.8.ந.க.எண்.பி2/8196/2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின்17.09.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.455/2012 **பொருள் எண்.14**

**<u>பொதுக்கழிப்பிட கட்டடம் இடிக்க அனுமதி.</u>**

| வ.எண் | வார்டு எண்.95 | மண்டலம் 8 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–8, பகுதி–21, வார்டு–95 புதிய ஆவடி சாலையில் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1998ஆம் வருடம் |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 24.14 ச.மீ. தரைதளம் |
| 3 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 46 ச.மீ. |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு முறையே | ரூ.7,500.00 |
| 5 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 6 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதியதாக பொதுக்கழிப்பிடம் கட்டுவதற்கு |
| 7 | இதை இடிப்பதற்கு அவசியம் என்ன ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது |
| 8 | இதை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| 9 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 8வது மண்டலம் வார்டு குழு தீர்மான எண்.57 நாள்27/08/2012 |

எனவே, மண்டலம்–8, பகுதி–21, வார்டு–95 புதிய ஆவடி சாலையில் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடத்தை இடிக்க நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.44/2012, நாள் 12.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

‘‘17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.267/2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம .அ.9 ந.க எண் இ1/13021/2012**
**ஆணையாளர் அவர்களின்13.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.456/2012 **பொருள் எண்.15**

**கன்னிக்கோவில் மேட்டில் பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி.**

**வார்டு–123.** **மண்டலம்–9**

| | | |
|---|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | : | மண்டலம்–9, பகுதி–25, வார்டு–123ல் கன்னிக்கோவில் மேட்டில் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ள பொதுக்கழிப்பிட கட்டிடம். |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம். | : | சென்னை மாநகராட்சி– 1985ஆம் வருடம் |
| இந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக. | | 200 ச. அடி, தரை தளம் மட்டும். |
| இந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு. | : | 200 ச.அடி. |
| இந்த கட்டிடம் இப்போது பயன் பாட்டில் உள்ளதா. | | இல்லை. |
| தற்போதைய புத்தக மதிப்பு. | : | ரூ. 1,739.28 ஆகும். |
| அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது | | சாலை விரிவாக்கம் பணி. |
| இக்கட்டிடத்தை இடிப்பதற்கு காரணம். | : | மிகவும் பழுதடைந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஏதுவாக இல்லாத நிலையில் உள்ளதால் இப்பொதுக் கழிப்பிட கட்டிடத்தை இடிக்கவேண்டியுள்ளது. |
| பரிந்துரை செய்தவர் | | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | | 9வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 786, நாள். 30.08.2012. |

எனவே, மண்டலம்–9, பகுதி–25, வார்டு–123, கன்னிக்கோவில் மேட்டில் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ள பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடிக்க நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.34/2012, நாள் 12.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 254/2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.9.ந.க.எண்.இ1/13022/2012**
**ஆணையாளர் அவர்களின்13.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.457/2012 **பொருள் எண்.16**

**பாலமுத்துகிருஷ்ணா தெருவில் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ள பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி.**

**வார்டு–113.** **மண்டலம்–9**

| | | |
|---|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | : | மண்டலம்–9, பகுதி–26, வார்டு–113ல் பாலமுத்து கிருஷ்ணா தெருவில் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ள பொதுக்கழிப்பிட கட்டிடம். |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம். | : | சென்னை மாநகராட்சி– 1968ஆம் வருடம் |
| இந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக. | | 226.40 ச. அடி (21.06 ச.மீ), தரைதளம் மட்டும். |
| இந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு. | : | 40.95 ச.மீ. |
| இந்த கட்டிடம் இப்போது பயன் பாட்டில் உள்ளதா. | | இல்லை. |
| தற்போதைய புத்தக மதிப்பு. | : | ரூ. 2,024.00 ஆகும். |
| அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்தமாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | | வார்டு உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் பல்நோக்கு கூடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| இக்கட்டிடத்தை இடிப்பதற்கு காரணம். | : | மிகவும் பழுதடைந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஏதுவாக இல்லாத நிலையில் உள்ளதால் இப்பொதுக் கழிப்பிட கட்டிடத்தை இடிக்கவேண்டியுள்ளது. |
| பரிந்துரை செய்தவர் | | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | : | 9– வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 793, நாள். 30 .08.2012. |

எனவே, மண்டலம்–9, பகுதி–26, வார்டு–113, பாலமுத்துகிருஷ்ணா தெருவில் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ள பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடிக்க நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘12.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.35/2012, நாள் 12.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 255/2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.12.ந.க.எண்.இ1/2852/2012**
**ஆணையாளர் அவர்களின்05.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.458/2012 **பொருள் எண்.17**

**பொதுக்கழிப்பிட கட்டடம் இடிக்க அனுமதி.**

| வ.எண் | வார்டு எண்.167 | மண்டலம் 12 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–12, பகுதி –37 வார்டு–167, 39வது தெரு நங்கநல்லூரில் உள்ள பொதுக்கழிப்பிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 2001 ஆம் வருடம் |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 1000 ச.அடி தரைதளம் |
| 3 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 1400 ச.மீ. |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு முறையே | ரூ.2,10,000.00 |
| 5 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 6 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | சாலை அகலப்படுத்துதல் |
| 7 | இதை இடிப்பதற்கு அவசியம் என்ன ? | உபயோகமின்றி பழுதடைந்துள்ளது |
| 8 | இதை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) |
| 9 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | 8வது மண்டலம் வார்டு குழு தீர்மான எண்.85 நாள்29/06/2012 |

எனவே, மண்டலம்–12, பகுதி 37 வார்டு–167, 39வது தெரு நங்கநல்லூரில் உள்ள பழுதடைந்த பொதுக்கழிப்பிடத்தை இடிக்க நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.45/2012, நாள் 12.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

‘‘17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.273/2012 நாள் 17.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>சு.ஜெ.ந.வே.தி.ந.க.எண்.390/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 12.10.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.459/2012 **பொருள் எண்.18**

**<u>சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமையில் வாழும் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வறுமைக்கோட்டு எண் வழங்க அனுமதி.</u>**

சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தில் சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஐந்து வட்டாட்சியர் அலுவலகங்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் முதியோர்களை அடையாளம் கண்டு அவர்களின் வறுமை நிலையை கண்டறிந்து அவர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் மூலமாக மத்திய அரசின் நிதியிலிருந்து 1019 முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

அவ்வாறு ஐந்து வட்டாட்சியர் அவர்களால் ஏப்ரல்–2012 மற்றும் மே–2012 மாதங்களில் கண்டறியப்பட்ட முதியோர்கள் பற்றிய விவரம் கீழ் வருமாறு:

| வ.எண் | வட்டாட்சியர் அலுவலகப் பெயர் | முதியோர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | எழும்பூர் – நுங்கம்பாக்கம் | 23 |
| 2 | கோட்டை – தண்டையார்பேட்டை | --- |
| 3 | மாம்பலம் –கிண்டி | 204 |
| 4 | மைலாப்பூர்– திருவல்லிக்கேணி | 190 |
| 5 | புரசைவாக்கம் – பெரம்பூர் | 109 |
| | மொத்தம் | 526 |

இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் இதுவரை 2,29,039 முதியோர்களுக்கு வறுமைக் கோட்டு எண் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக மேலே குறிப்பிட்டுள்ள 526 முதியோர்களுக்கு வறுமைக் கோட்டு எண். 2,29,040 முதல் 2,29,565 வரை வறுமைக்கோட்டு எண் வழங்கப்பட வேண்டும்.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட 90 முதியோர்களுக்கான ஓய்வூதிய பட்டியல் பெறப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் இது வரை 814 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 815 முதல் 904 வரை வறுமைக்கோட்டு எண் வழங்கப்பட வேண்டும்.

| வ.எண் | வட்டாட்சியர் அலுவலகப் பெயர் | முதியோர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஆலந்தூர் வட்டாட்சியர் அலுவலகம் | 90 |

எனவே, மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குட்பட்ட 526 முதியோர்களுக்கு வறுமைக்கோட்டு எண். 2,29,040 முதல் 2,29,565 வரை வழங்கவும், மேலும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குட்பட்ட ஆலந்தூர் பகுதியில் உள்ள 90 பயனாளிகளுக்கும் இதற்கு முன் வழங்கப்பட்ட வறுமைக்கோட்டு எண்ணின் தொடர்ச்சியாக 815 முதல் 904 வரை வறுமைக்கோட்டு எண் வழங்கவும் நிலைக்குழு(கல்வி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘15.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 68/2012, நாள்.15.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**சு.ஜெ.ந.வே.தி.ந.க.எண்.403/2012**
**ஆணையர் அவர்களின் 12.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.460/2012 **பொருள் எண்.19**

**சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமையில் வாழும் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வறுமைக்கோட்டு எண் வழங்க அனுமதி.**

சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தில் சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஐந்து வட்டாட்சியர் அலுவலகங்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் முதியோர்கள், விதவைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் வறுமை நிலையை கண்டறிந்து அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் மூலமாக மத்திய அரசின் நிதியிலிருந்து 890 பயனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்க தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**பயனாளிகளின் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

| வ. எண் | வட்டாட்சியர் அலுவலகப் பெயர் | முதியோர் ஓய்வூதியம் | விதவை ஓய்வூதியம் | மாற்றுத் திறனாளி ஓய்வூதியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | எழும்பூர் – நுங்கம்பாக்கம் | 18 | 0 | 0 | 18 |
| 2 | கோட்டை – தண்டையார்பேட்டை | 486 | 53 | 5 | 544 |
| 3 | மாம்பலம் –கிண்டி | 49 | 132 | 0 | 181 |
| 4 | மைலாப்பூர்– திருவல்லிக்கேணி | 97 | 0 | 0 | 97 |
| 5 | புரசைவாக்கம் – பெரம்பூர் | 50 | 0 | 0 | 50 |
| | மொத்தம் | 700 | 185 | 5 | 890 |

இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் இதுவரை 2,29,039 முதியோர்களுக்கு வறுமைக் கோட்டு எண் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் 526 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண். 2,29,040 முதல் 2,29,565 வரை வழங்க ஆணையரின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக மேலே குறிப்பிட்டுள்ள 700 முதியோர்களுக்கும் 185 விதவைகளுக்கும் மற்றும் 5 மாற்றுத் திறனாளிகளுக்குமாக மொத்தம் 890 பயனாளிகளுக்கு வறுமைக் கோட்டு எண். 2,29,566 முதல் 2,30,455 வரை வழங்கப்பட வேண்டும்.

மேலும் காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலில் சென்னை மாநகராட்சி மண்டலம்–14 மற்றும் மண்டலம்–15க்கு உட்பட்ட பகுதிகளில் கண்டறியப்பட்ட 302 பயனாளிகளின் விவரம் கீழ்வருமாறு:

| வ. எண் | சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலகம் சென்னை மாநகராட்சி, மண்டலம்–14 | முதியோர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மடிப்பாக்கம் | 07 |
| 2 | கொட்டிவாக்கம் | 17 |
| 3 | பெருங்குடி | 14 |
| 4 | பள்ளிக்கரணை | 25 |
| 5 | ஜல்லடியன்பேட்டை | 01 |
| 6 | உள்ளகரம் புழுதிவாக்கம் | 26 |
| | மொத்தம் | 90 |

| வ. எண் | சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலகம் சென்னை மாநகராட்சி மண்டலம்–15 | முதியோர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நீலாங்கரை | 34 |
| 2 | ஒக்கியம் – துரைப்பாக்கம் | 36 |
| 3 | உத்தண்டி | 40 |
| 4 | செம்மஞ்சேரி | 66 |
| 5 | காரப்பாக்கம் | 08 |
| 6 | சோழிங்கநல்லூர் | 13 |
| 7 | ஈஞ்சம்பாக்கம் | 15 |
| | மொத்தம் | 212 |

சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு இதுவரை 814 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 90 பயனாளிகளுக்கு வறுமைக் கோட்டு எண் 815 முதல் 904 வரை வழங்க ஆணையரின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 90 + 212 = 302 பயனாளிகளுக்கும் வறுமைக்கோட்டு எண். 905 முதல் 1206 வரை வழங்கப்பட வேண்டும்.

எனவே, மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குட்பட்ட 700 முதியோர்கள், 185 விதவைகள் மற்றும் 5 மாற்று திறனாளிகளுக்குமாக மொத்தம் 890 பயனாளிகளுக்கும் வறுமைக்கோட்டு எண் 2,29,566 முதல் 2,30,455 வரை வழங்கவும், மேலும் காஞ்சிபுரம் மாவட்டம் சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட சென்னை மாநகராட்சி மண்டலம்–14ல் கண்டறியப்பட்ட 90 பயனாளிகள் மற்றும் மண்டலம்–15ல் கண்டறியப்பட்ட 212 பயனாளிகளுக்குமாக மொத்தம் 302 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண். 905 முதல் 1206 வரை வறுமைக்கோட்டு எண் வழங்க நிலைக்குழு(கல்வி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘15.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 69/2012, நாள்.15.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.அ.8.ந.க.எண்.WDC08 /3487/ 2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 27.09.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.461/2012 **பொருள் எண்.20**

**<u>தானப்பத்திரம்</u>**

திருவாளர் சி & எம் டிஜிட்டல் நிறுவனம் சார்பில் கோட்டம்–103, புதிய ஆவடி சாலையில் கதவு எண்.11 (பழைய எண்35) வியாபார ஸ்தலத்துடன் கூடிய குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்காக திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார். சென்னை நகர வளர்ச்சி குழுமம் மேம்படுத்தும் வரைபடத்தின்படி (D.D.P) புதிய ஆவடி சாலையில் 18.0 மீட்டர் அகலத்திற்கு சாலை விரிவுப்படுத்தும் உத்தேசம் உள்ள காரணத்தினால் விண்ணப்பதாரரின் மனையின் 1.50 மீ அகலத்திற்கு 11.89 மீ நீளத்திற்கும் 17.84 சதுர மீட்டர் பரப்பு இடத்தினை சாலை விாவாக்கத்திற்காக சென்னை மாநகராட்சியில் ஒப்படைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து விண்ணப்பதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டு விண்ணப்பதாரார் அவர்கள் மேற்படி நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்திட ஒப்புதல் அளித்துள்ளார்.

சாலை விரிவாக்கத்திற்காக மேற்படி நிலத்தினை தானப்பத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சி பெற்று கொள்ள 8வது வார்டு குழுவின் பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

எனவே,

1. கோட்டம்–103, புதிய ஆவடி சாலையில் R.S.No. 72/14, Block No.09 எழும்பூர் நுங்கம்பாக்கம் கிராமத்தில் 1.50மீ அகலமும் 11.89 மீ நீளம் வரையுள்ள 17.84 ச.மீ நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,
2. மேற்படி இடத்தினை சாலை விரிவாக்க பணிக்காக ஆகும் செலவுத்தொகையான ரூ.40,000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) மனுதாரரிடமிருந்து வசூல் செய்திடவும்,
3. மனை உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழ்'' சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்ள மேற்படி 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''11.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தின் தீர்மான எண்.15/2012, நாள் 11.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.9.ந.க.எண்.WDC09 /8811/ 2012**
**ஆணையர் அவர்களின் 22.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.462/2012 **பொருள் எண்.21**

**தானப்பத்திரம்**

திரு.எம்.நதீம் உசேன் மற்றும் திரு.எம். நயீம் உசேன் அவர்கள் வார்டு – 113, டாக்டர் எம்.ஜி.ஆர் சாலை (கோடம்பாக்கம் நெடுஞ்சாலை) கதவு எண் 28/164, சென்னை –34 வியாபார ஸ்லத்துடன் கூடிய கட்டிடம் கட்டுவதற்காக திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார். டாக்டர் எம்.ஜி.ஆர் சாலையின் தற்போதைய அகலம் 18.80 மீட்டர் ஆகும். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் விரிவான மேம்படுத்தும் வரைபடத்தின்படி (D.D.P) டாக்டர் எம்.ஜி.ஆர் சாலையில் 27.0 மீட்டர் அகலத்திற்கு சாலை விரிவுபடுத்தும் உத்தேசம் உள்ள காரணத்தினால் விண்ணப்பதாரரின் மனையின் 8.84 மீட்டர் நீளமும் 4.10.மீட்டர் அகலமும் கூடிய 36.24 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தினை சாலை விரிவாக்கத்திற்காக சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என உள்ளது. இது குறித்து விண்ணப்பதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி கடிதத்திற்கு விண்ணப்பதாரர் அவர்கள் மேற்படி இடத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைக்க ஒப்புதல் கடிதம் அளித்துள்ளார்.

சாலை விரிவாக்கத்திற்காக மேற்படி இடத்தினை தானபத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சி பெற்று கொள்ள 9வது வார்டு குழுவின் பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

எனவே,

1. வார்டு 113, டாக்டர் எம்.ஜி.ஆர் சாலையில் R.S.No.162, நுங்கம்பாக்கம் கிராமத்தில் 8.84 மீட்டர் நீளமும் 4.10 மீட்டர் அகலமும் கூடிய 36.24 சதுர மீட்டர் இடத்தினை சாலை விரிவாக்கத்திற்காக தானபத்திரம் மூலம் பெற்றுக்கொள்ளவும்,
2. மேற்படி இடத்தினை சாலை விரிவாக்கப் பணிக்காக ஆகும் செலவுத் தொகையான ரூ.85,000/– (எண்பத்து ஐயாயிரம் மட்டும்) மனுதாரரிடம் பெற்றுக்கொள்ளவும்,
3. மனை உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு வளர்ச்சி உரிமை சான்றிதழை (Development Rights Certificate) சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

மேற்படி இடத்தினை பெற்றுக் கொள்ள மேற்காணும் 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தின் தீர்மான எண்.13/2012, நாள் 11.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.10.ந.க.எண்.WDC10 /5652/ 2012**
**ஆணையர் அவர்களின் 14.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.463/2012 **பொருள் எண்.22**

**தானப்பத்திரம்**

திரு. டி.எஸ். ஜவகர் காந்த், கதவு எண்.97, ஆற்காடு சாலை, சாலிகிராமம், சென்னை–93, என்ற இடத்திற்கு கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–10ல் விண்ணப்பித்துள்ளார். அவர் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்–II''ன் மூலம் இச்சாலையை 30 மீட்டர் அகலத்திலிருந்து 30.50 மீட்டர் அகலமாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 1 அடி அகலமுள்ள இடத்தினை தான பத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். கட்டட உரிமையாளர் அவர்கள் தனது மனையின் முன் பக்கத்தில் 1 அடி அகலத்திற்கு 19.50 சதுர அடி பரப்பளவு நிலத்தினை தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் வழங்கிய தான பத்திரத்தின் வரைவை வார்டு குழு, மண்டலம்–10ல் பரிந்துரை செய்து (தீர்மானம் எண்.350) 15.05.2012 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனவே,

1. கட்டட உரிமையாளர் திரு. ஜவகர் காந்த் மூலம் இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் 19.50 ச.அடி நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.1310.00/–யை கட்டட உரிமையாளரிடம் ''ஆணையர், சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் காசோலையாக பெறவும்,
3. கட்டட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழ்''யை சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

மேற்கூறிய நிலத்தினை தானமாக பெற மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''11.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தின் தீர்மான எண்.16/2012, நாள் 11.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.10.ந.க.எண்.WDC10 /8120/ 2012**
**ஆணையர் அவர்களின் 04.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.464/2012 **பொருள் எண்.23**

**தானப்பத்திரம்**

திருமதி. எம்.ஏ.சபீஹா பீ, கதவு எண் 60(ப),143 (பு) ரங்கராஜபுரம் மெயின் ரோடு, கோடம்பாக்கம், சென்னை–600 024. ச.எண்33, டி.எஸ்.எண்4/56, பிளாக் 45, புலியூர் கிராமம், கிண்டி–மாம்பலம் தாலுகா என்ற இடத்திற்கு கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி மண்டலம்–10ல் விண்ணப்பித்துள்ளார். அவர் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்-II''ன் மூலம் இச்சாலையை 14.70 மீட்டர் அகலத்திலிருந்து 18.00 மீட்டர் அகலமாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 1.70 மீ அகலமுள்ள இடத்தினை தான பத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். கட்டட உரிமையாளர் அவர்கள் தனது மனையின் முன் பக்கத்தில் 1.70 மீ அகலத்திற்கு 23.00ச.மீ பரப்பளவு நிலத்தினை தானமாக கொடுக்க இசைவு தெரிவிதுள்ளார்.

மேலும் அவர் வழங்கிய தான பத்திரத்தின் வரைவை வார்டு குழு மண்டலம்–10ல் பரிந்துரை செய்து (தீர்மானம் எண்.480) 21.06.2012 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனவே,

1. கட்டட உரிமையாளர் திருமதி. எம்.ஏ. சபீஹா பீ, மூலம் இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் 23.00ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சி தானமாக பெறவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.13,087/–யை கட்டட உரிமையாளரிடம் ''ஆணையர் சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் காசோலையாக பெறவும்,
3. கட்டட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழ்''–யை சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

மேற்கூறிய நிலத்தினை தானமாக பெற மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''11.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தின் தீர்மான எண்.14/2012, நாள் 11.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.14.வ.து.ந.க.எண்.ஆர்1/1724/2012</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 16.10.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.**465/2012** **பொருள் எண்.24**

**<u>வயது முதிர்வு ஓய்வு அனுமதி</u>**

**13.01.2012** நாளிட்ட சுற்றறிக்கையின்படி பிரிவு–**2**ஆம் நிலையை சார்ந்த திருமதி. நா.அன்னபூரணி, உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–**14** அவர்கள் **31.10.2012** அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வில் செல்ல உள்ளார். திருமதி நா.அன்னபூரணி அவர்கள் **21.12.1983** அன்று சென்னை மாநகராட்சியில் தட்டச்சராக பணியில் சேர்ந்துள்ளார். **21.12.1983** முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது **28.03.1986** தேதி முதல் அப்பதவியில் தகுதிகாண் பருவம் முடித்துள்ளார். **12.04.1993** தேதி முதல் உதவியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். **12.04.1993** தேதி முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. **07.09.2006** தேதி முதல் உரிமம் ஆய்வாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். **07.09.2006** தேதி முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. **28.06.2007** தேதி முதல் வரிமதிப்பீட்டாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். **28.06.2007** தேதி முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. **11.01.2010** தேதி முதல் உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு பெற்றுள்ளார். தனியருக்கு **11.01.2010** முதல் உதவி வருவாய் அலுவலர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

இவரது பணிபதிவேட்டில் இவரது பிறந்த தேதி **30.10.1954** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இவரது வயது முதிர்வு ஓய்வு பெறும் தேதி **31.10.2012** ஆகும். இவர் வகுப்பு இரண்டை சேர்ந்தவராவர். எனவே இவரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது. மண்டலம்–**14**ல் இவர் மீது எந்த ஒரு ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. மேலும் தணிக்கைத்தடை மற்றும் முன்பண நிலுவை தொகை ஏதும் இல்லை. சென்னை மாநகராட்சி விழிப்புக் குழுமத்தில் இவர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லையென விழிப்பு அலுவலர் **03.1.0.2012** நாளிட்ட குறிப்பில் தெரிவித்துள்ளார். சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லையென அதன் தனி அலுவலர் தனது **01.03.2012** நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

| பதவி | காலம் | பணிபுரிந்த துறை |
|---|---|---|
| தட்டச்சர் | **21.12.1983** முதல் **15.10.1987** | கல்வித்துறை |
| தட்டச்சர் | **16.10.1987** முதல் **30.09.1989** | பணித்துறை (பாலங்கள்துறை) |
| தட்டச்சர் | **01.10.1989** முதல் **11.04.1993** | பொதுத்துறை |
| உதவியாளர் | **12.04.1993** முதல் **01.07.1997** | சுகாதாரத்துறை |
| உதவியாளர் | **02.07.1997** முதல் **09.08.2001** | பொதுத்துறை |
| உதவியாளர் | **10.08.2001** முதல் **06.09.2006** | கல்வித்துறை |
| உரிமம் ஆய்வாளர் | **07.09.2006** முதல் **27.06.2007** | பழைய மண்டலம்–**10** |
| வரி மதிப்பீட்டாளர் | **28.06.2007** முதல் **31.08.2009** | பழைய மண்டலம்–**10** |
| வரி மதிப்பீட்டாளர் | **01.09.2009** முதல் **10.01.2010** | பழைய மண்டலம்–**9** |
| உதவி வருவாய் அலுவலர் | **11.01.2010** முதல் **20.11.2010** | பழைய மண்டலம்–**3** |
| உதவி வருவாய் அலுவலர் | **21.11.2010** முதல் **19.12.2011** முற்பகல் | பழைய மண்டலம்–**9** |
| உதவி வருவாய் அலுவலர் | பிற்பகல் **19.12.2011** முதல் இன்று வரை | மண்டலம்–**14** |

தனியர் பணிபுரிந்த அனைத்து துறைகள் / மண்டலங்களில் இருந்து தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை தணிக்கைத்தடை மற்றும் முன்பண நிலுவைகள் ஏதும் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

தனியர் பழைய மண்டலம்–**3**ல் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்த **11.01.2010**முதல் **20.11.2010** வரையிலும் மற்றும் பழைய மண்டலம்–**9**ல் வரிமதிப்பீட்டாளராக **01.09.2009** முதல் **10.01.2010** வரையிலும் பின்னர் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்த காலமான **21.11.2010** முதல் **19.12.2011** வரையிலும் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடை (கூட்டுப்பொறுப்பு) விவரம் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையில் அளிக்கப்பட்டுள்ளது. இத்தணிக்கைத் தடைகள் அனைத்தும் கூட்டுப்பொறுப்பு என்பதால் இத்தணிக்கைத்தடைகளை நீக்கம் செய்ய நிர்வாக ரீதியாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் தனியர் பழைய மண்டலம்—10ல் (புதிய மண்டலம்—13) 07.09.2006 முதல் 27.06.2007 வரை உரிமம் ஆய்வாளராகவும் 28.06.2007 முதல் 31.08.2009 வரை வரி மதிப்பீட்டாளராகவும் பணிபுரிந்த காலத்தில் கூட்டுப்பொறுப்பான தணிக்கைத் தடைகள் இருப்பதாக தெரிவிக்கப்பபட்டுள்ளது. இத்தணிக்கைத் தடைகள் அனைத்தும் கூட்டுப்பொறுப்பு என்பதால் இத்தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்ய நிர்வாக ரீதியாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

துணை இயக்குநர் 12.09.2012 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள திருமதி. நா. அன்னபூரணி, உதவி வருவாய் அலுவலர், பழைய மண்டலம்—3ல் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்த காலமான 11.01.2010 முதல் 20.11.2010 வரையிலும் பழைய மண்டலம்—9 ல் வரிமதிப்பீட்டாளராக பணிபுரிந்த காலமான 01.09.2009 முதல் 10.01.2010 வரையிலும் பின்னர் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்த காலமான 21.11.2010 முதல் 19.12.2011 வரையிலும் கூட்டுப்பொறுப்பாக்கும் தணிக்கைத்தடைகளை நீக்கம் செய்ய அறிவுறுத்தியுள்ளார் அதன்படி நிர்வாகரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தனியர் 31.10.2012 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல இருப்பதால் இவரை பணியிலிருந்து ஓய்வில் செல்ல அனுமதிக்க மண்டலம் / துறைக்கு ஆட்சேபணை இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திருமதி நா.அன்னபூரணி, உதவி வருவாய் அலுவலர், மண்டலம்—14 தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடைகள், நிதி சம்மந்தப்பட்ட தணிக்கைத் தடைகள், நீண்டகால முன்பண நிலுவை தொகை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு அன்னாரை பொறுப்பாக்கி அவரின் ஓய்வூதியப் பணப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இவரை 31.10.2012 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமாக சமர்பிக்கப்படுகிறது.

‘‘ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ1/3263 /2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 17.10.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.466/2012 **பொருள் எண்.25**

**<u>பணிவரன்முறை</u>**

**28.05.2012** நாளிட்ட அரசாணையில், **2012–2013** ஆம் ஆண்டிற்கான தலைமை பொறியாளர் பதவி உயர்வுக்கு **4** நபர்களைக் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும், தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள **4** பொறியாளர்களில் **2** நபர்களுக்கு தலைமை பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கியும் அரசு ஆணை வழங்கியுள்ளது. இதனை தொடர்ந்து தலைமை பொறியாளர் பதவியில் காலியாகவுள்ள பணியிடங்களில் தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள **2** பொறியாளர்களுக்கு ரூ.**37400–67000**+தரஊதியம் **8700** தர ஊதியம் என்ற காலமுறை ஊதியத்தில் கண்காணிப்பு பொறியாளர்களாக **28.05.2012** மற்றும் **02.07.2012** நாளிட்ட ஆணையரது ஆணையின்படி பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டது.

**28.05.2012** மற்றும் **02.07.2012** ஆகிய தேதியிட்ட சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணைகள் மூலம் மேற்சொன்ன **2** பொறியாளருக்கு, தலைமை பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டது. பதவி உயர்வு பெற்ற தலைமை பொறியாளர்களின் விவரம் மற்றும் தனியர்கள் அப்பதவியில் பணியில் சேர்ந்த நாள் பின்வருமாறு அமைகிறது. தனியர்கள் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில்லை.

| **வ.எண்.** | **பெயர் / திருவாளர்கள்** | **தலைமை பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் மற்றும் உறுதியாக்கம், பணிவரன்முறை செய்யப்படும் நாள்** |
|---|---|---|
| **1.** | திரு. ம. ராமமூர்த்தி | **28.05.2012** பி.ப., |
| **2.** | திரு. ஆர்.குமரேசன் | **03.07.2012** பி.ப., |

சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகளின்படி சென்னை மாநகராட்சி கண்காணிப்புப் பொறியாளர் பதவி வகுப்பு – IAன் கீழ் வருவதால், மேற்படி வரிசை எண்.**1** முதல் **2** வரையில் உள்ள தலைமை பொறியாளர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் உறுதியாக்கம் மற்றும் பணிவரன்முறைப்படுத்த நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண்.பி13/37207/2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 12/10/2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.467/2012 **பொருள் எண்.26**

**<u>அரசாணை அமலாக்கம்</u>**

அரசாணை எண்.365, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் : 08.10.2012ன் படி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 01.07.2012 முதல் 65 விழுக்காட்டிலிருந்து 72 விழுக்காடாக உயர்த்தி திருத்திய அகவிலைப்படி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்துமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் 16,360 ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் உள்ளனர். இவ்வரசாணையை நடைமுறைப்படுத்தி திருத்தப்பட்ட அகவிலைப்படியை ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு, ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படி குடும்ப ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய அகவிலைப்படிக்கு கணக்கிடப்பட்டு வழங்க ஒரு ஆண்டிற்கு ரூ.6.35 கோடி செலவாகும். (01.07.2012 ஜீலை முதல் மார்ச் 2013 வரை நடப்பு நிதி ஆண்டிற்கு மட்டும் ரூ.4.77 கோடி) செலவிட வேண்டியுள்ளது.

அரசாணை எண்.365 நிதி (ஓய்வூதியம்) துறை நாள் : 08.10.2012ன்படி திருத்தப்பட்ட அகவிலைப்படி 65 விழுக்காட்டிலிருந்து 72 விழுக்காடாக உயர்த்தி 01.07.2012 முதல் சென்னை மாநகராட்சி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்க ஏதுவாக நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''19.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.317/2012 நாள் 19.10.2012—ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.க.கு.ந.க.எண்.அ8/3298/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 12.10.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.**468/2012** **பொருள் எண்.27**

**<u>அரசாணை அமலாக்கம் – பின்னேற்பு</u>**

அரசாணை எண்.362 நிதி (படிகள்) துறை நாள்.**05.10.2012**ல் ஜீலை **2012** முதல் அகவிலைப்படி **65** விழுக்காடிலிருந்து **72** விழுக்காடுகள் உயர்த்தி வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையில் **01.07.2012** முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படியை ரொக்கமாக வழங்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வரசாணையில், ஏற்கனவே அகவிலைப்படி பெறும் சில்லறை செலவினத்திய குறிப்பிடப்பட்ட மாத சம்பளம் பெறும் முழுநேர பணியாளர்களுக்கு பொருந்தும் மற்றும் பகுதி நேர பணியாளர்களுக்கு பொருந்தாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அகவிலைப்படி உயர்த்தப்பட்டு வெளியிடப்பட்ட இவ்வரசாணை மான்யம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுக்கும் உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்களுக்கும் பல்கலைகழக மான்ய குழு / அனைத்து இந்திய தொழிற் நுட்ப கல்வி குழு சம்பள விகிதங்களின் கீழ்வரும் பணியாளர்களுக்கும் அரசு மற்றும் மான்யம் பெறும் பல் தொழில் பயிற்சி பள்ளிகள், சிறப்பு பட்டயப்படிப்பு நிறுவனங்களில் பாணியாற்றும் ஆசிரியர்கள் / உடற்பயிற்சி இயக்குநர்கள் / நூலகர்கள் ஆகியோர்க்கும் வருவாய் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், மதிய உணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவி செய்பவர்கள், சிறுவர் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்களுக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கீழுள்ள கிராம பஞ்சாயத்துகளில் பணிபுரியும் உதவியாளர்கள்/எழுத்தர்களுக்கும் பொருந்தும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அகவிலைப்படியினால் சென்னை மாநகராட்சிக்கு மாதம் ஒன்றுக்கு ஆகும் கூடுதல் செலவீனம் ரூ.**1.15** கோடியாகும் எனவும் நடப்பு நிதியாண்டில் ரூ.**6.80** கோடி கூடுதல் செலவினம் ஏற்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வரசாணை சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கும் பொருந்தும் என்பதால், இவ்வராசாணை சென்னை மாநகராட்சியில், மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு நடைமுறைப்படுத்த, ஆணையரின் ஆணை பெறப்பட்டது.

எனவே, அரசாணை எண்.362 நிதி(படிகள்) துறை நாள்.**05.10.2012**யினை நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு சென்னை மாநகராட்சியில் **01.07.2012** முதல் நடைமுறைப்படுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''**19.10.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். **333/2012** நாள் **19.10.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.பி3/17133/2012**
**ஆணையர் அவர்களின் 29.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.**469/2012** **பொருள் எண்.28**

**புதிதாக தரம் உயர்த்தப்பட்ட சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் நூலகம் அமைக்க அனுமதி**

சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கை–**2012**ல் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் தொடக்க உரையில் பக்க எண்–**12** வரிசை எண்–**5**ல் குறிப்பிட்டுள்ளவாறு சென்னை உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளில் உள்ள நூலகங்கள் அனைத்தும் புனரமைக்கப்படுவதுடன் தேவையான அளவில் புத்தங்களும் வைக்கப்படும் தற்பொழுது நூலகம் இல்லாத உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் புதிய நூலகங்கள் அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில் நூலகம் இல்லாத தற்போது தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளான சென்னை உயர்நிலைப் பள்ளி எம்.எம்.டி.எ.II, சென்னை உயர்நிலைப் பள்ளி மெக்நிக்கல்ஸ் சாலை, சென்னை உயர்நிலைப் பள்ளி கோட்டூர் ஆகிய பள்ளிகளில் புதிய நூலகங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய நூலகம் அமைப்பதற்கு தேவையான 20’x20’ அறைகள் மூன்று பள்ளிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு அறைக்குத் தேவையான வசதிகள், மின்விசிறிகள், குழல் விளக்குகள் பொருத்துவது, தரையினை சரிசெய்வது, நூலகம் என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதுவது போன்ற பள்ளிகளுக்குத் தேவையான வசதிகள் மேம்படுத்துதல் (Infrastructure up-gradation) போன்ற பராமரிப்பு பணிகளை மண்டல அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நூலகத்திற்கு தேவையான தளவாடப் பொருட்களான மாணவர்கள் அமர்ந்து படிப்பதற்கு இரட்டை இருக்கைகள், புத்தகங்கள் வைப்பதற்கு தேவையான மர அலமாரிகள், நூலகர் அமர்வதற்கு தேவையான மேஜை மற்றும் நாற்காலிகள் டான்ஸி நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

எனவே,

1. புதிதாக தரம் உயர்த்தப்பட்ட **3** சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் புதிய நூலகம் அமைப்பதற்கும்,
2. புதிய நூலகம் அமைப்பதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் (Infrastructure up-gradation) போன்ற பராமரிப்பு பணிகளை அந்தந்த மண்டல அலுவலர்கள் மூலம் மேற்கொள்வதற்கும்,
3. புதிய நூலகத்திற்கு தேவையான தளவாடப் பொருட்கள் கணக்கு குறியீட்டு எண்–**230–11–01–01** EF4-80-82-01 என்ற தலைப்பில் Tansi நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்வதற்கும்.

மேற்கண்ட **1** முதல் **3** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**15.10.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். **65/2012**, நாள் **15.10.2012**–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘**19.10.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். **322/2012** நாள் **19.10.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.பி3/15762/2012**
**ஆணையர் அவர்களின் 18.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.470/2012 **பொருள் எண்.29**

**சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்களை வாங்கி நூலகங்களை புனரமைத்தல், தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் புதிய நூல்கள் வாங்க அனுமதி**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2012–2013ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை எண்:5ல் சென்னை மாநகராட்சியின் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள நூலகங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்படுவதுடன் தேவையான அளவில் புத்தகங்களும் வழங்கப்படும் என்றும் தற்போது நூலகம் இல்லாத தரம் உயர்த்தப்பட்ட உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் புதிய நூலகங்கள் அமைக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உரிய நூல்களுடன் பராமரிக்கப்படும் நூலகங்கள் மாணவர்களின் அடிப்படை அறிவை வளர்க்கும் அடையாளச் சின்னமாக இருப்பதால், ஏற்கனவே நூலகங்கள் உள்ள 35 உயர்நிலைப் பள்ளிகள் 32 மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் புதிதாக தரம் உயர்த்தப்பட்ட 3 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 6 பள்ளிகள் ஆகிய 76 பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் புத்தகங்கள் வாங்கி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே,

1. 76 உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை 1000க்கு கீழ் உள்ள 59 உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 25 புத்தகங்கள் அடங்கிய ஒரு செட் புத்தகங்கள் வழங்கவும், மாணவர்களின் எண்ணிக்கை 1000க்கு மேல் உள்ள 17 மேல்நிலைப் பள்ளிகளுக்கு இரண்டு செட் புத்தகங்கள் வழங்க அனுமதியும்,
2. 25 புத்தகங்கள் அடங்கிய ஒரு செட் புத்தகத்தின் விலை ரூ.1295/– மொத்தம் 93 செட் புத்தகத்தின் விலை 93xரூ.1295=ரூ.1,20,435/– ஆகும். புத்தகத்தின் மொத்த விலை ரூ.1,20,435/–இல் 25% கழிவு ரூ.30,109/– தள்ளுபடி செய்து ரூ.90,326/–தொகைக்கு புத்தகம் வாங்க அனுமதியும்,
3. இச்செலவீனங்களை கணக்கு குறியீட்டு எண் **EF-480-82-01 DP-230-11-01-01** கல்வித்தர மேம்பாடு உயர்/மேல்நிலைக் கல்வி என்ற தலைப்பில் மேற்கொண்டு புத்தக நிறுவனத்திற்கு வழங்க அனுமதியும்

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘15.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 64/2012, நாள் 15.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 321/2012 நாள் 19.10.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>க.து.ந.க.எண்.பி3/15761 /2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 24.09.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.471/2012 **பொருள் எண்.30**

**<u>சென்னைப் பள்ளிகளில் நாளிதழ்கள் / வாராந்திர இதழ்களை மாணவர்கள் கட்டாயமாகப் படித்திட வழிவகை செய்ய அனுமதி.</u>**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2012–2013 நிதிநிலை அறிக்கை எண் 6ல் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் அனைவரும் நாளிதழ்கள் மற்றும் வார இதழ்கள் படிக்க ஊக்குவிக்கப்படுவார்கள் என்றும் அவ்விதழ்களிலிருந்து மாதாந்திர வினாடி வினா போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

எனவே, பள்ளிப் பருவத்தில் மாணவர்கள் பொது அறிவினைப் பெறவும் நாளிதழ்கள் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும், சொல்வதெழுதுதல் "வினாடி வினா" போட்டி அனைத்து உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நடத்தப்படும். இப்போட்டிகள் ஒவ்வொரு பள்ளியிலும் 6, 7, 8 வகுப்புகள் ஒரு பிரிவாகவும், 9, 10 வகுப்புகள் ஒரு பிரிவாகவும், 11, 12 வகுப்புகள் மற்றொரு பிரிவாகவும் நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலும் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசு வழங்கப்படும். முதல் பரிசாக ரூ.200/–, இரண்டாம் பரிசாக ரூ.150/–, மூன்றாம் பரிசாக ரூ.100/– வழங்கப்படும். 76 உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், மாணவர்கள் எண்ணிக்கை 1000 வரையில் உள்ள 59 உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு (விரிவாக்கம் செய்யப்பட்ட பள்ளிகளையும் சேர்த்து) தலா ஒரு செட் பரிசும், மாணவர்கள் எண்ணிக்கை 1000க்கு மேல் உள்ள 17 மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா இரண்டு செட் பரிசும் வழங்கப்படும்.

இப்போட்டிகள் அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி ஆகிய 5 மாதங்களில் நடத்தப்பட்டு பரிசுகள் ரொக்கப் பரிசுகளாக வழங்கப்படும்.

**<u>செலவீன விவரங்கள்</u>**

| வ.எண் | பள்ளிகள் | விவரங்கள் | மொத்த பரிசு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 43 உயர்நிலைப் பள்ளிகள் (மாணவர் எண்ணிக்கை 1000 வரை) | நடுநிலை, உயர்நிலை வகுப்புகளுக்கு 5 மாதங்களுக்கு தலா 1 செட் பரிசுகள் 43 x 2 x 5 x 450 | 1,93,500/– |
| 2 | 16 மேல்நிலைப் பள்ளிகள் (மாணவர் எண்ணிக்கை 1000 வரை) | நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளுக்கு 5 மாதங்களுக்கு தலா 1 செட் பரிசுகள் 16 x 3 x 5 x 450 | 1,08,000/– |
| 3 | 17 மேல்நிலைப் பள்ளிகள் (மாணவர் எண்ணிக்கை 1000க்கும் அதிகம் | நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளுக்கு 5 மாதங்களுக்கு தலா 2 செட் பரிசுகள் 17 x 3 x 5 x 2 x 450 | 2,29,500/– |
| | 76 பள்ளிகள் | மொத்த ரொக்கப் பரிசுகள் | 5,31,000/– |

எனவே,

1. நாளிதழிலிருந்து வினாடி வினா போட்டி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நடத்தவும், போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்க அனுமதியும்,
2. ரூ.5,31,000/– (ரூபாய் ஐந்து இலட்சத்து முப்பத்து ஒன்றாயிரம் மட்டும்) இவ்வகைக்காக ரொக்கப் பரிசாக வழங்க அனுமதியும்,

3. இச்செலவீனங்களை கணக்கு குறியீட்டு எண் EF-480-82-01 DP-230-11-01-01 கல்வித்தர மேம்பாடு உயர்/மேல்நிலைக் கல்வி என்ற தலைப்பில் மேற்கொண்டு பள்ளிகளுக்கு முன் பணமாக **460–50–01–19** இக்கணக்கு குறியீட்டு எண்ணில் பெற அனுமதியும்.

மேற்கண்ட **1** முதல் **3** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "**15.10.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.**63/2012**, நாள் **15.10.2012**–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> "**19.10.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். **320/2012** நாள் **19.10.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**க.து.ந.க.எண்.அ1/15866/2012**
**ஆணையர் அவர்களின் 12.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.472/2012 **பொருள் எண்.31**

**வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் நிதி நிலை அறிக்கை 2012–2013 அறிவிப்பு எண்.13– சென்னை பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு இசை பயிற்சி வழங்க அனுமதி.**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 2012–2013 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட உரை, வரிசை எண்.13ல் ஒவ்வொரு சென்னை பள்ளியிலும் இசைப்பயிற்சி அறை ஏற்படுத்தப்பட்டு ஒரு பகுதி நேர இசைப்பயிற்சி ஆசிரியர் தேவைக்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுவார். மாணவ / மாணவியர்களின் திறமைக்கேற்ப தேவையின் அடிப்படையில் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் இசைப்பள்ளிகளிலிருந்து தேவையான வழிகாட்டு உதவிகள் பெறப்படும் என அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக சென்னை பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு இசைப்பயிற்சியான குரலிசை பயிற்சியினை முதற்கட்டமாக பரீட்சார்த்த முறையில் சென்னை மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு தமிழ்நாடு இசைக்கல்லூரி குரலிசை ஆசிரியர்களை பகுதி நேர ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து பயிற்சி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பகுதி நேர ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படும் குரலிசை ஆசிரியர்களுக்கு மாத மதிப்பூதியம் ஒரு ஆசிரியர்க்கு தலா ரூ.5,000/– என சுமார் 6 மாத காலத்திற்கு (அக்டோபர்–2012 முதல் மார்ச்–2013 வரை) பள்ளித் தலைமையாசிரியர்கள் வழங்கும் வருகைச் சான்றின் பேரில் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, கீழ்காணும் 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, வரிசை எண்.13 ல் அறிவித்தவாறு இசை பயிற்சி திட்டத்தினை செயல்படுத்தவும்,
2. இப்பயிற்சியினை முதற்கட்டமாக பரீட்சார்த்த முறையில் சென்னை மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு நடத்திடவும்,
3. தமிழ்நாடு இசைக்கல்லூரியிலிருந்து குரலிசை ஆசிரியர்களை சுமார் 6 மாத காலத்திற்கு (OCT-2012 TO MARCH-2013) ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து மாத மதிப்பூதியம் ஒரு ஆசிரியருக்கு ரூ.5000/– என வழங்கவும்,

‘‘15.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.70/2012, நாள் 15.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.323/2012 நாள்.19.10.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>க.து.ந.க.எண்.பி3/3060/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 29.09.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.473/2012 **பொருள் எண்.32**

**<u>30 சென்னை மேல்நிலைப்பள்ளிகளில் ''இசைப்பயிற்சி.அறை'' ஏற்படுத்த அனுமதி.</u>**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை4ஹக பக்க எண்.14 வரிசை எண்.12ல் இசையானது மாணவர்களிடையே ஒத்திசைந்து செல்லும் தன்மையை வளர்க்க உதவுகிறது. இசைக் கருவிகளைக் கையாளக் குழந்தைகள் கற்றுக்கொண்டால் அது அவர்களிடம் இருக்கும் ஒத்துப்போகும் ஆற்றலை, கூடி வாழும் தன்மையை மற்றவர்களுடன் இணைந்து வாழும் வாழ்க்கையை வெளிப்படுத்தும். இதனால் பள்ளி அளவில் மாணவர்களிடையே எழும் வேற்றுமைகள் பிணக்குகள் மறைந்து ஒற்றுமை பெருகும் சாதனையாளர்கள் தோன்றுவர்.

சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ''இசைப் பயிற்சி அறை'' தலா ஒன்று உருவாக்கப்படும். அதில் மாணவர்கள் விரும்பிடும் பயிற்சியினை மேற்கொள்ள ஏதுவாக இந்திய மற்றும் மேற்கத்திய இசைக் கருவிகளுடன் இசைப் பயிற்சி அறை உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில் முதற்கட்டமாக 18 சென்னை உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு வகுப்பறையை இசைப் பயிற்சிக்காக ஒதுக்கி தரவும் ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்கள் பயனடையும் வகையில் இந்திய மற்றும் மேற்கத்திய இசைக் கருவிகள் வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**<u>பள்ளிகளின் விவரங்கள்</u>**

| வ.எண் | பள்ளியின் பெயர் | கோட்டம் | மண்டலம் |
|---|---|---|---|
| 1. | சென்னை உயர்நிலைப் பள்ளி ஸ்ட்ரஹான்ஸ்ரோடு | 73 | 6 |
| 2. | சென்னை உயர்நிலைப் பள்ளி நியூ காமராஜ் நகர் | 44 | 5 |
| 3. | சென்னை உயர்நிலைப் பள்ளி வி.பி.கோயில் தெரு | 121 | 9 |
| 4. | சென்னை உயர்நிலைப் பள்ளி ரங்கராஜபுரம் | 134 | 10 |
| 5. | சென்னை உயர்நிலைப் பள்ளி காமராஜ் அவென்யூ | 175 | 13 |
| 6. | சென்னை உயர்நிலைப் பள்ளி சி.பி.டி.காலனி | 39 | 4 |
| 7. | சென்னை மேல்நிலைப்பள்ளி எண்.1, புத்தா தெரு | 47 | 4 |
| 8. | சென்னை மேல்நிலைப்பள்ளி சைதாப்பேட்டை | 142 | 10 |
| 9. | சென்னை மேல்நிலைப்பள்ளி எம்.எச்.சாலை(பெண்கள்) | 70 | 6 |
| 10. | சென்னை மேல்நிலைப்பள்ளி மார்கெட் தெரு(பெண்கள்) | 67 | 6 |
| 11. | சென்னை மேல்நிலைப்பள்ளி ராட்லர் தெரு (பெண்கள்) | 58 | 5 |
| 12. | சென்னை மேல்நிலைப்பள்ளி சி.ஐ.டி. நகர் | 141 | 10 |
| 13. | சென்னை மேல்நிலைப்பள்ளி 731, டி.எச்.ரோடு | 39 | 4 |
| 14. | சென்னை மேல்நிலைப்பள்ளி புலியூர் | 130 | 10 |
| 15. | சென்னை மேல்நிலைப்பள்ளி நுங்கம்பாக்கம் (பெண்கள்) | 110 | 9 |
| 16. | சென்னை மேல்நிலைப்பள்ளி மடுவின்கரை | 170 | 13 |
| 17. | சென்னை மேல்நிலைப்பள்ளி ஆழ்வார்பேட்டை | 123 | 9 |
| 18. | சென்னை மேல்நிலைப்பள்ளி சுப்பராயன்தெரு | 107 | 8 |

**<u>சென்னை உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளுக்குத் தேவையான இசைக்கருவிகளின் விலை விவரம்</u>**

| S.No. | Description | Qty | Rate(Rs.) | Amount (Rs.) |
|---|---|---|---|---|
| 1. | DRUM 14" Brass with stick and Belt | 1 No. | 2,330.00 | 2,330.00 |
| 2. | DRUM 24" Brass with stick and Mallet | 1 No. | 4,350.00 | 4,350.00 |
| 3. | Trumpet Nadirali 67N with Gigbag | 1 No. | 4,500.00 | 4,500.00 |
| 4. | Kapas 1st Quality | 1 No. | 200.00 | 200.00 |
| 5. | Maracus Metal pair | 1 No. | 125.00 | 125.00 |
| 6. | Tamboorine 10" Fibre with Head | 1 No. | 400.00 | 400.00 |
| 7. | Talam Bhajan 3" | 1 No. | 250.00 | 250.00 |
| 8. | Bongoes Medium Spl | 1 No. | 750.00 | 750.00 |
| 9. | Casio KeyBoard MA150 with Adaptor | 1 No. | 3,595.00 | 3,595.00 |
| 10. | Radel Shruthi Box Nano | 1 No. | 1830.00 | 1830.00 |
| 11. | Triangle with Beater Heavy | 1 No. | 250.00 | 250.00 |
| 12. | Salangai 4 Row Leather | 1 No. | 440.00 | 440.00 |
| 13. | Flute Straight Brass | 1 No. | 135.00 | 135.00 |
| 14. | Hohner MothOrgan Silber Star C | 1 No. | 395.00 | 395.00 |
| 15. | Egg Shakers (Pair) | 1 No. | 150.00 | 150.00 |
| | | | | **19,700.00** |

( Rupees Nineteen Thousand Seven Hundred Only)

ஒரு பள்ளிக்கு இசைச் கருவிகள் வாங்குவதற்கான செலவு ரூ.19,700/— என 18 சென்னை உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.3,54,600/— செலவு ஆகும்.

எனவே,

1. சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள வகுப்பறைகளில் ஒரு வகுப்பறையை இசைப்பயிற்சி அறையாக ஒதுக்கவும்
2. மாணவர்கள் விரும்பிடும் பயிற்சியினை மேற்கொள்ள ஏதுவாக இசைக்கருவிகள் ஒரு பள்ளிக்கு ரூ.19,700/— செலவில் முதற்கட்டமாக 18 சென்னை உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.3,54,600/— (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து அறுநூறு மட்டும்) செலவில் Musee Musical என்ற நிறுவனத்தின் மூலம் வாங்குவதற்கும்
3. இதற்கான செலவீனங்கள் கணக்கு குறியீட்டு எண். EF. 80—82—01, 230—11—01—01 என்ற தலைப்பில் மேற்கொள்ளவும்.

மேற்காண் 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘15.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 62/2012, நாள் 15.10.2012—ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.319/2012 நாள்.19.10.2012—ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.பி7/3260/2012**

**<u>ஆணையர் அவர்களின் 24.09.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.474/2012 **பொருள் எண்.33**

**<u>மதிப்பீடு</u>**

**வார்டு எண் : 83** மண்டலம் : 7

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | கட்டடத்துறை – மண்டலம்–7, வார்டு–83 மதனக்குப்பத்தில் வாகன இயக்கூர்தி நிலையம் அமைக்கும் பணி |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை .. / மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ.293.00 இலட்சம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2012-2013 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி |
| நிதியின் மூலத்தன்மை | மூலதன நிதி 2012–2013 |
| வார்டு குழு தீர்மான எண். மற்றும் நாள் | வார்டு குழு தீர்மானம் பின்னர் பெறப்படும் |

எனவே, மேற்கண்ட பணிக்கான திட்ட மதிப்பீடு ரூ.2,93,00,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 267/2012 நாள் 17.10.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள் ) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 327/2012 நாள் 19.10.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பா.து.ந.க.எண்.பி3/0341/2012**
**ஆணையர் அவர்களின் 13.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.475/2012 **பொருள் எண்.34**

**மண்டலம் –6, வார்டு – 73ல் ஸ்டீபன்சன் சாலையில் ஏற்கனவே உள்ள பாலத்தினை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் பணி - ரூ.8,23,00,000/–க்கு மதிப்பீட்டிற்கு அனுமதி**

கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 01. பணியின் பெயர் | : | மண்டலம் –6, வார்டு – 73ல் ஸ்டீபன்சன் சாலையில் ஏற்கனவே உள்ள பாலத்தினை இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் பணி. |
| 02. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | பாலங்கள் துறை |
| 03. சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | பாலங்கள் துறை |
| 04. தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் நாள் | : | தலைமைப் பொறியாளர்/க(ம) பா எண்.01/2012–2013, நாள். 31.08.2012. |
| 05. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2012 – 2013 |
| 06. மதிப்பீட்டின் தொகை | | |
| (அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ. 6,42,93,387.60 |
| (ஆ)மேற்பார்வை செலவினம் 10% | : | ரூ. 64,29,338.76 |
| (இ) சிறுமேற்பார்வை செலவினம் 2.5% | : | ரூ. 16,07,334.69 |
| (ஈ) சேவைத்துறையினருக்கு தொகை | : | ரூ. 40,00,000.00 |
| (உ)மின் விளக்குகள் அமைத்தல் | : | ரூ. 10,00,000.00 |
| (ஊ) விலையேற்றத்தொகை | : | ரூ. 33,00,000.00 |
| (எ) எதிர்பாரா செலவினம் 2.5% | : | ரூ. 16,69,938.95 |
| மொத்தம் | : | ரூ.8,23,00,000.00 |
| 07. ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு (அ) ஒரு மீட்டருக்கு செலவு | : | –– |
| 08. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா ? | : | ஆம் |
| 09. மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் நாள். | : | 6வது வார்டு குழுவின் தீர்மான எண். 4/2012, நாள்.31.08.2012. |
| 10. நிதியின் மூலத்தன்மை | : | மூலதன நிதி |
| (அ) வரவு செலவு ஒதுக்கீடு பாலங்கள் மற்றும் சிறு மேம்பாலங்கள் 2012 – 2013 | : | ரூ. 23,00,00,000/– |
| (ஆ) மதிப்பீட்டிற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகை | : | மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னர் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் |
| (இ) மீதம் உள்ள நிதி (அ–ஆ) | : | |
| (ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | ரூ.8,23,00,000/– |

மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.8,23,00,000/– மதிப்பீட்டிற்கும் தமிழ்நாடு அரசிதழ் எண்.301, நாள்.30.10.2003ல் வெளியிடப்பட்டுள்ள தமிழக அரசின் சட்டம் எண்.9/2003, சென்னை மாநகராட்சியின் சட்டம் விதி 1919ல் விதிகள் 78 மற்றும் மன்றத்தின் தீர்மான எண்.639/2003, நாள்.21.11.2003ல் அளிக்கப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படியும் மற்றும் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்ட பின் ஒப்பங்கள் கோரி பணியினை செயல்படுத்தவும் நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு (ம) நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 269/2012 நாள் 17.10.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 328/2012 நாள் 19.10.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>க.து.ந.க.எண்.பி2/2237/2012</u>**

**<u>ஆணையர் அவர்களின் 29.09.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.**476/2012** **பொருள் எண்.35**

**<u>ஒப்பந்தப்புள்ளி ஏற்பு</u>**

வார்டு எண் : 18 மண்டலம் : 2

கண்ணகி சிலை அருகில்

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | மண்டலம்–2, வார்டு–18 மணலி, சி.பி.சி.எல். மனை பிரிவில் எரிவாயு எரியூட்டகம் கட்டும் பணி |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை/ மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை | **ரூ.** 1,15,15,000.00 |
| மதிப்பீடு ஒப்புதல் பெறப்பட்ட விவரம் | மன்றத்தின் அனுமதி எண் **306/12** ehs;: 24.08.2012 |
| விலைப்பட்டி ஆண்டு | 2011-2012 Mk; Mz;od; அலுவலக விலை விவரப்படி |

ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்

| t. vz;. | xg;gj;jpy; gA;Bfw;wth; bgah; திருவாளர்கள் / திரு. | gzpapd; mYtyf kjpg;g[ | xg;ge;jjhuhpd; xg;gj;bjhif | 2011-2012 Mk; Mz;od; tpiytpfpjk; tpGf;fhL mjpfk;/Fiwt[ |
|---|---|---|---|---|
| 1. | ராஜேஷ் அண்டு கோ | U}.99,79,082.89 | U}.1,14,75,945.32 | (+)15.00% அதிகம் |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விவரங்கள் | ஆம். பேச்சு வார்த்தை நடத்தப்பட்ட நாள்;. 20.09.2012 ஒப்பந்ததாரர் தன் ஒப்ப விழுக்காடு மேலும் குறைக்க சம்மதம் தெரிவிக்கவில்லை. |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்ப விவரம் | U}.1,14,75,945.32 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | திருவாளர்கள். ராஜேஷ் அண்டு கோ |
| இறுதி ஒப்பந்தத்தொகை ரூபாய் | U}.1,14,75,945.32 |
| இறுதி ஒப்ப சதவிகிதம் | (+)15.00% mjpfம் |
| விலைப்பட்டி ஆண்டு | **2011–2012** |

எனவே, மேற்குறிப்பிட்ட பணிக்கு குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ராஜேஷ் அண்டு கோ அவர்களின் U}.1,14,75,945.32 க்கான அதாவது **2011–12**ம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+)15.00% mjpfமான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்ப பணியை அவர்களுக்கு அளிக்க epiyf;FG (gzpfs;), epiyf;FG (thptpjpg;g[ (k) epjp) மூலமாக மன்றத்தின் mDkjp Btz;o rkh;g;gpf;fg;gLfpwJ.

‘‘**17.10.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். **252/2012** நாள் **17.10.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘**19.10.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். **326/2012** நாள் **19.10.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>க.து.ந.க.எண்.பி6/1549/2012</u>**

**<u>ஆணையர் அவர்களின் 06.10.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.477/2012 **பொருள் எண்.36**

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

**வார்டு எண் : 74** **மண்டலம் : 6**

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | கட்டடத்துறை – மண்டலம்–6, வார்டு–74 நம்மாழ்வார்பேட்டை சின்னபாபு தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த கட்டிடத்தை இடித்து விட்டு (தரைதளம் + முதல்தளம்) புதிதாக தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளத்தில் 6+6+6+6 வகுப்பறைகள் கட்டும் பணி. |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை .. / மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ.205.00 இலட்சம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2011-2012 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி |
| நிதியின் மூலத்தன்மை | மூலதனநிதி – கட்டடத்துறை 2012-2013 |
| வார்டு குழு தீர்மான எண். மற்றும் நாள் | தீர்மானஎண்.91, நாள்27.06.2012. |

ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள். திரு / திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2011-2012 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1. | V.R.K. பில்டர்ஸ் | ரூ.1,76,48,408.05 | ரூ . 2,03,66,262.88 | (+)15.40%அதிகம் |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விவரங்கள் | ஆம். பேச்சு வார்த்தை நடத்தப்பட்ட நாள் 17.09.2012 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்ப விவரம் | ரூ. 2,03,66,262.88 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | திருவாளர்கள். V.R.K. பில்டர்ஸ் |
| இறுதி ஒப்பந்தத்தொகை ரூபாய் | ரூ. 2,03,66,262.88 |
| இறுதி ஒப்ப சதவிகிதம் | (+)15.40% அதிகம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2011-2012 |

எனவே, மேற்குறிப்பிட்ட பணிக்கு குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.V.R.K. பில்டர்ஸ் அவர்களின் ரூ.2,03,66,262.88க்கான அதாவது 2011-12ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+)15.40% அதிகமான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்ப பணியை அவர்களுக்கு அளிக்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''**17.10.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். **270 / 2012** நாள் **17.10.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள் ) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

'' **19.10.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். **329/2012** நாள் **19.10.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.பி6/1074/2012**

**ஆணையர் அவர்களின் 22.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.478/2012 **பொருள் எண்.37**

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

**வார்டு எண் : 73** **மண்டலம் : 6**

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | கட்டடத்துறை – மண்டலம்–6, வார்டு–73 திருவேங்கடசாமி தெருவில் உள்ள சென்னை உயர்நிலை பள்ளியில் உள்ள பழுதடைந்த கட்டிடத்தை இடித்து விட்டு (தரைதளம் + முதல்தளம்) புதியதாக தரைதளம், முதல்தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளத்தில் 3+3+3+3 வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் கட்டும் பணி |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை .. / மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ.165.00 இலட்சம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2011-2012 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி |
| நிதியின் மூலத்தன்மை | மூலதனநிதி – கட்டடத்துறை 2012-2013 |
| வார்டு குழு தீர்மான எண். மற்றும் நாள் | தீர்மானஎண்.30, நாள்30.04.2012. |

**ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்**

| . எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள். திரு / திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2011-2012 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1. | கஜலஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | ரூ.1,43,43,632.69 | ரூ . 1,86,46,722.49 | (+)30.00%அதிகம் |
| 2 | ராஜேஷ் அன்டு கோ | ரூ.1,43,43,632.69 | ரூ . 1,72,12,359.22 | (+)20.00%அதிகம் |
| 3 | யோகலஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | ரூ.1,43,43,632.69 | ரூ . 1,69,11,142.94 | (+)17.90%அதிகம் |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விவரங்கள் | ஆம். பேச்சு வார்த்தை நடத்தப்பட்ட நாள் 27.08.2012 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்ப விவரம் | ரூ. 1,69,11,142.94 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | திருவாளர்கள். யோகலஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் |
| இறுதி ஒப்பந்தத்தொகை ரூபாய் | ரூ. 1,69,11,142.94 |
| இறுதி ஒப்ப சதவிகிதம் | (+)17.90% அதிகம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2011-2012 |

எனவே, மேற்குறிப்பிட்ட பணிக்கு குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். யோகலஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்அவர்களின் ரூ. 1,69,11,142.94க்கான அதாவது 2011-2012ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+)17.90% அதிகமான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்ப பணியை அவர்களுக்கு அளிக்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**17.10.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். **271 / 2012** நாள் **17.10.2012–**ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘**19.10.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். **330/2012** நாள் **19.10.2012–**ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**க.து.ந.க.எண்.பி9/2045/2009**

**ஆணையர் அவர்களின் 29.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.479/2012 **பொருள் எண்.38**

**<u>பழைய மண்டலம்–9, வார்டு–139, சைதாப்பேட்டை ரிச்சர்ட்ஸ் பூங்காவில் புதியதாக தரைதளம் மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய மண்டல அலுவலகம்–9 கட்டும் பணிக்கு 07.05.2010 அன்று ஒப்பங்கள் கோரப்பட்டது – இப்பணியினை கைவிடவும் மற்றும் இவ்வொப்பந்தத்தை ரத்து செய்யவும் அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி, கட்டடத்துறையில் பழைய மண்டலம்–9 வார்டு–139, சைதாப்பேட்டை ரிச்சட்ஸ் பூங்காவில் புதியதாக தரைதளம் மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய மண்டல அலுவலகம்–9 கட்டும் பணிக்கு 07.05.2010 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தத்தில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்.சிவா இன்ஜினியரிங் கம்பெனி அவர்களுக்கு ஒப்பம் வழங்க மன்றத்தின் அனுமதி பெற்று 17.02.2011 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, 29.06.2011 அன்று உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இதற்கு இடையில் சென்னை மாநகர விரிவாக்கத்தில் ஏற்கனவே மண்டலம்–9ல் உள்ள அனைத்து வார்டுகளும் மண்டலம்–9, 10 மற்றும் 13 உடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, இங்கு புதிய மண்டல அலுவலகம் கட்டாமல் இதனை (Regional Office) வட்டார அலுவலகம் ஆக மாற்றலாம் எனவும் பாசீலிக்கப்பட்டது. மேற்கண்ட இடத்தில் ஏற்கனவே உள்ள கட்டிடமே வட்டார அலுவலகத்திற்கு போதுமானதாக உள்ளது. எனவே இப்பணியினை தற்போது கைவிடவும்.

மேலும் 26.06.2012 நாளிட்ட கடிதத்தில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரான திருவாளர்கள் சிவா இன்ஜினியரிங் கம்பெனி அவர்கள் மேற்கண்ட பணிக்கு செலுத்தியுள்ள காப்பு தொகையை திரும்ப வழங்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

எனவே, மேற்கூறப்பட்ட காரணங்களை கருத்தில் கொண்டு பழைய மண்டலம்–9, வார்டு–139, சைதாப்பேட்டை ரிச்சர்ட்ஸ் பூங்காவில் புதியதாக தரைதளம் மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய மண்டல அலுவலகம்–9 கட்டும் பணிக்கு ஏற்கப்பட்ட ஒப்பந்தத்தை கைவிடவும் மற்றும் ஒப்பந்ததாரர் திருவாளர்கள் சிவா இன்ஜினியரிங் கம்பெனி அவர்கள் செலுத்தியுள்ள காப்பு தொகை ரூ.19,20,000/– வங்கி உத்திரவாதம் (Bank Guarantee) திரும்ப வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 251/2012 நாள் 17.10.2012–ன் படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 325/2012 நாள் 19.10.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/3325/2012**
**ஆணையர் அவர்களின் 17.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.480/2012 **பொருள் எண்.39**

**தெருக்களில் சுற்றித் திரியும் நாய்களை பிடிப்பதற்காக இலகுரக வாகனங்கள் 8 எண்ணிக்கைகளில் கொள்முதல் செய்தல்**

சென்னை மாநகராட்சி, தெரு நாய்களின் தொல்லையை கட்டுப்படுத்திட நாய்களுக்கு இனக்கட்டுபாடு அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பு ஊசிபோடும், (Animal Birth Control) திட்டத்தினை விலங்கியல் தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் ஆகிய எஸ்.பி.சி.ஏ (SPCA), பூளு கிராஸ் ஆப் இந்தியா (Blue Cross of India) மற்றும் பீப்பிள் ஃபார் அனிமெல் (People for Animal) ஆகியவைகளுடன் இணைந்து சீரிய முறையில் கடந்த **1996–**ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டு வருகிறது.

தற்போதுள்ள **6** நாய் பிடிக்கும் வண்டிகளில், **12** ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு, கழிவு செய்யும் நிலையில் உள்ள **2** வண்டிகளை தவிர, **4** வண்டிகள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளன.

விரிவாக்கப்பட்ட பகுதிகள், சென்னை மாநகராட்சியில் இணைக்கப்பட்டபின், அதிக எண்ணிக்கையில் பெறப்படும், புகார்களின் மீது நடவடிக்கை எடுக்க மேலும் **8** நாய் பிடிக்கும் வண்டிகள் தேவைப்படுவதால் புதியதாக அவ்வண்டிகளை கொள்முதல் செய்ய சுகாதாரத் துறை, கால் நடை மருத்துவ அலுவலரால் ஆணையரிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதன்படி, மேற்பார்வை பொறியாளர் (இ) அவர்களை இக்கொள்முதல் தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்க சுகாதாரத்துறை கேட்டுக்கொண்டதன் பேரில் இக்கொள்முதலுக்கான விளம்பரங்கள் தமிழ் நாளிதழ், ஆங்கில நாளிதழ் மற்றும் சென்னை மாநகராட்சி செய்தி மலர் ஆகியவற்றில் ஒப்ப திறப்பு நாள் **31.08.2012** என பிரசுரிக்கப்பட்டது. மேலும் இதற்கான ஒப்ப படிவங்கள் தயாரிக்கப்பட்டு, கணினியிலிருந்து இலவசமாக இறக்கம் செய்து கொள்ளும்பொருட்டு, ஒப்ப படிவங்கள் ஏற்றம் செய்யப்பட்டன.

ஒப்ப படிவங்களில் கீழ்காணும் தொழில் நுட்ப சிறப்பு அம்சங்கள் சேர்க்கப்பட்டிருந்தன.

1. தற்போது நிரந்தர பதிவு செய்ய நடைமுறையில் இருந்துவரும், BS-IV Emission norms - கொண்ட சேசிஸ் வகைகளே வழங்க வேண்டும்.
2. 16 எண்ணிக்கை நாய்களை ( 8 பகுதிகளில் ஒன்றன் பின் ஒன்றாக இரு அடுக்குகளில் – 2 tiers consisting of 8 bays each. ) பிடித்து கட்டுவதற்கு ஏதுவாக வாகன பின்புறம் ( Rear body) அமைந்திருக்க வேண்டும்.
3. **1.6** மில்லி மீட்டர் பருமனுள்ள எவர் சில்வர் தகடுகளால், உள்புற பகுதிகள், M.S. தகடுகளின் மீது வேயப்பட்டிருக்க வேண்டும்.
4. ஒவ்வொரு நாயையும், பிடித்து கட்டுவதற்கு ஏதுவாக எவர் சில்வர் வளையங்கள், பொருத்தப்பட வேண்டும்.

ஒப்பதிறப்பு நாளான **31.08.2012** அன்று **2** ஒப்பங்கள், திருவாளர்கள். வைஷ்ணவி மோட்டார்ஸ் மற்றும் திருவாளர்கள். ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் ஆகியோரிடமிருந்து பெறப்பட்டன. தொழில் நுட்ப தகுதிகள் சரிபார்க்கப்பட்டபின், இரு ஒப்பங்களும் தகுதியானவைகளாக கருதப்பட்டு, நிதி ஒப்பங்கள் **20.09.2012** அன்று திறக்கப்பட்டன.

அந்த விலை விவரங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:–

| வ. எண் | விவரம் | ஒரு வாகன விலை ரூ. | எண்ணிக்கை | 8 வாகனங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| -- | இலகுரக சேசிஸ் மேல் பொருத்தப்பட்ட நாய் பிடி வாகனங்கள், ஒப்ப விதிகளின்படி வழங்க [அனைத்து வரிகள் (நுழைவு வரி உட்பட), தற்காலிக வாகனப்பதிவு, போக்குவரத்துச் செலவு, இடைவழிக் காப்பீடு உட்பட) | -- | 8 | -- |

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர்கள். வைஷ்ணவி மோட்டார்ஸ்<br>Model:-Eicher 10.50 – 2750 WB – BS IV Emission Norms | 13,06,800/- | 8 | 1,04,54,400/- |
| 2. | திருவாளர்கள். ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் (பி) லிமிடெட்<br>Model:-Eicher 10.50 – 2750 WB – BS IV Emission Norms | 13,09,000/- | 8 | 1,04,72,000/- |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலின்படி, இவ்வொப்பத்தில், குறைந்த விலையாக ஒரு எண்ணிக்கை இலகுரக சேசிஸ் மேல் பொருத்தப்பட்ட நாய் பிடி வாகன விலை ரூ. 13,06,800/– என பெறப்பட்டுள்ளது.

திருவாளர்கள். ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் (பி) லிமிடெட் நிறுவனம் தங்களது 20.09.2012 தேதியிட்ட மின்னஞ்சல் மூலம் தாங்கள் சிறுதொழில் நிறுவனம் ஆகையால், தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவு இல்லா ஒப்பவிதிகள் 2000 –ன்படி தங்களுக்கு விலைகளில் 15 சதவிகித முன்னுரிமை அளிக்க வேண்டியும் தாங்கள் ஒரு வாகனம் ரூ.13,06,800/–க்கு வழங்க சம்மதிப்பதாயும், கடிதம் அளித்திருந்தனர். இவ்விலையானது இவ்வொப்பத்தில் பெறப்பட்ட குறைந்த விலைக்கு (Price Discovery) சமமான விலையாகும்.

தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதிகள், 2000 பிரிவு 29 (f)–ன்படி ஒப்பத்தில் பங்கேற்ற உள்நாட்டு சிறுதொழில் நிறுவனங்களால் (Domestic Small Scale Industries) தயாரிக்கப்படும் உற்பத்தி பொருள்களுக்கு 15 சதவிகிதம் விலையில் முன்னுரிமையை அளித்து, ஒப்ப மதிப்பீடு செய்யும்போது ஒப்பீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதும் தெரிய வருகிறது. (15% Price preference for domestic small scale industries)

இதன்படி, 15 சதவிகிதம் விலையில் சிறுதொழிலுக்கான முன் உரிமையை தமிழ்நாடு ஒளிவு மறைவில்லா ஒப்ப விதிகளின்படி, திருவாளர்கள். ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கும் சூழ்நிலையில், அவர்களின் ஒப்பு நோக்குக்காக, எடுத்துக்கொள்ளப்படும் விலையானது ரூ.15,02,820/– (13, 06,800/–x 15%) என்பதாகும். இவ்விலையை விட திருவாளர்கள். ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் (பி) லிமிடெட் நிறுவனம் இவ்வொப்பத்தில் குறிப்பிட்டிருந்த ரூ.13,09,000/– ஆனது குறைவாக உள்ளதால், இவ்வொப்பதாரரே குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் ஆகிறார்.

இதன் அடிப்படையில், திருவாளர்கள். ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் (பி) லிமிடெட் அவர்கள் 20.09.2012 தேதியிட்ட கடிதம் மூலம் பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டனர்.

தொடர்ந்து நடத்தப்பட்ட நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப்பின் திருவாளர்கள். ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் (பி) லிமிடெட் நிறுவனம் அவர்கள், தங்களது 26.09.2012 தேதியிட்ட கடிதம் மூலம், இறுதியாக ஒரு வாகனம் ரூ.12,85,000/– க்கு வழங்க சம்மதித்தனர். மேலும், அவர்கள், தாங்கள் குறிப்பிட்டிருந்த விலையின் பிரிவுகளை கீழ்க்கண்டவாறு அளித்திருந்தனர்.

| வ. எண் | விவரம் | விலை ரூ. |
|---|---|---|
| 1. | Eicher 10.50 CBC BS IV Chassis | 8,00,000/– |
| 2. | நாய் பிடி வண்டியின் பின்புற பாகம் உருவாக்குதலுக்கான மூலப்பொருட்கள் (Angles, Sheets, Channel & Mesh – 2750 Kg. @ Rs.60 Per Kg.) | 1,65,000/– |
| 3. | பின்புற பாகத்தில் M.S. தகடுகள் மீது வேயப்படும் 1.6 மி. மீ எவர் சில்வர் தகடுகளின் விலை ( 740 Kg @ Rs. 165/- per kg. ) | 1,22,100/– |
| 4. | Aluminium Joints, Beedings, Al.Sheets & Windows, etc (98 Kg x Rs.200/-) | 19,600/– |
| 5. | Doors, Seating arrangements Rear Butterfly door, Side sliding doors,etc. | 26,500/– |
| 7. | Painting & Electrical materials | 16,000/– |
| 8. | Consumables (Rivets, Bolts, Nuts, Welding Rods,etc.,) | 17,000/– |
| 9. | வரிசை எண். 2 முதல் 8 வரை | 3,66,200/– |
| 10. | 2% Tax on material cost (Sl.No.9) | 7,324/– |

| | | |
|---|---|---|
| **11.** | Direct conversion charges Including labour for fabrication, Paint & Electricals | **38,000/–** |
| **12.** | Indirect Labour charges (Forming, Bending, Lathe works, etc) | **3,000/–** |
| **13.** | Manufacturing overhead 25% on labour (Sl.No.11 & 12) | **10,250/–** |
| **14.** | வரிசை எண். 9 முதல் 13 வரை | **4,24,744/–** |
| **15.** | VAT @ Rate of 14.5 % on S. No. 13 | **61,592/–** |
| | மொத்தம் ( வ.எண். 1, 14 மற்றும் 15) | **12,86,336/–** |

மேலே காண்பிக்கப்பட்டுள்ள பட்டியலில் இலாபத்திற்கான தொகை சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலில் வரிசை எண் 1ல் சுட்டிகாட்டப்பட்டுள்ள ஒரு எண்ணிக்கை சேசிஸின் விலை, ரூ.8,00,000/–க்கான விலைப் பட்டியலை திருவாளர்கள். ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் அவர்கள் சேசிஸ் தயாரிப்பில் முன்னணி நிறுவனமான திருவாளர்கள். எய்ச்சர் நிறுவனத்திடமிருந்து பெற்று அளித்துள்ளனர்.. இவ்விலையானது 14.5% VAT, போக்குவரத்து செலவு மற்றும் தற்காலிக வாகன பதிவு , ஆகியவற்றுடன் சேர்த்து குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இவ்விலையானது சென்னை மாநகராட்சிக்காக எய்ச்சர் நிறுவனத்தால் சிறப்பு விலையாக அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இலகுரக வாகன, சேசிஸ் மேல் ஏறப்பெற செய்த நாய் பிடிக்கும் வாகன விலை கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக, பரிந்துரை செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

1. BS. IV emission norms கொண்ட எஞ்சின் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வகை எஞ்சின்களின் விலை BS. III emission norms கொண்ட எஞ்சின்களின் விலையை விட கணிசமாக உயர்ந்துள்ளது .
2. திருவாளர்கள். எய்ச்சர் நிறுவனத்தினரால் தயாரிக்கப்படும் தரமான இவ்வகை சேசிஸ்கள் அதிகமான அளவில் இந்தியாவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிறுவனம் பெயர் பெற்ற நிறுவனங்களில் ஒன்று. மேலும், இந்நிறுவனம் அரசாங்கங்களுக்கு விநியோகம் செய்யும் இவ்வகை சேசிஸ்களின் விலை இந்தியா முழுவதும், ஒரே மாதிரியாக குறிப்பிடப்பட்டிருக்கும்.
3. கடந்த சில வருடங்களில், M.S. Angles, Sheets, Channel, Mesh மற்றும் எவர் சில்வர் தகடுகள் ஆகியவற்றின் அபரிமித விலை ஏற்றம் , எரிபொருள்களின் விலை ஏற்றம் மற்றும் எரிபொருட்களின் விலையேற்றத்தால் ஏற்றம்பெற்ற இதர உதிரிபாகங்கள், மற்றும் தொழிலாளர் சம்பளமும் ஏற்றம்பெற்றுள்ளது.
4. திருவாளர்கள். ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் உள்ளூரில் அமைந்துள்ள சிறுதொழில் நிறுவனம் ஆகையால் இவ்வகை வாகனங்களின் பராமரிப்பு சுலபமாகிறது.
5. திருவாளர்கள். ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் திருவாளர்கள். அசோக் லேலண்டு லிமிடெட் மற்றும் டாடா மோட்டார்ஸ் நிறுவனம் போன்ற மிகப்பெரிய வாகன தயாரிப்பாளர்களுக்கு Rear Body மற்றும் Bus Body வேலைகள் செய்து வழங்கும், ஒரு சிறப்பான பெரிய நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.
   மேலும், இவர்கள் சென்னை பெருநகர் போக்குவரத்து கழகம் மற்றும் இதர போக்குவரத்து கழகங்களுக்கும், Bus Body Building வேலைகள் திறம்பட மேற்கொள்பவர் என்பதும் தெரிய வருகிறது.
6. இவ்வொப்பத்தில் பெறப்பட்ட குறைந்த விலையான (Price Discovery) ரூ.13,06,800/-ஐ விட இறுதி ஒப்ப விலை ரூ. 21,800/– குறைத்துப் பெறப்பட்டுள்ளது.

இதன்படி, Eicher 10.50 BS IV 2750 WB Chassis மேல் ஏறப்பெற செய்த நாய் பிடி வாகனம் ஒன்றுக்கு ரூ.12,85,000/– வீதம் 8 வாகனங்கள் வழங்க ரூ.1,02,80,000/– செலவு ஆகும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இக்கோப்பு ஒப்ப குழு கூட்டத்தில் சுற்றுக்கு விட்டு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

இச்செலவீனத்தை சுகாதாரத் துறை – கால் நடை மருத்துவ பிரிவு – 2012–2013 ஆம் ஆண்டு மூலதன கணக்கில் கூடுதல் நிதியாக ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாகனங்களுக்கான நிரந்தரப்பதிவு, தகுதி சான்றிதழ், சாலை வரி, மற்றும் நடை வழி காப்பீடு ஆகியவைகளை திருவாளர்கள். ஜி.எஸ். பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மேற்கொண்டபின் அதற்கான உரிய செலவு சீட்டுகளை ஒப்படைக்கும் பட்சத்தில் அத்தொகையை அவர்களுக்கு ஒப்ப விதிகளின்படி திருப்பி வழங்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இவ்வொப்பத்தின் செல்லத்தக்க காலம் 27.11.2012 வரை ஆகும்.

எனவே,

1. தமிழ்நாடு அரசு ஒளிவு மறைவில்லா ஒப்பவிதிகள் 2000 பிரிவு 29 (f)ன்படி, உள்நாட்டு சிறுதொழில் நிறுவனமான திருவாளர்கள். ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் அவர்களிடமிருந்து Eicher Model – 10.50 BS IV Emission norms – 2750 WB Chassis மேல் பொருத்தப்பட்ட இலகுரக நாய் பிடிக்கும் வாகனங்கள் வழங்க, வாகனம் ஒன்றுக்கு ரூ. 12,85,000/– வீதம் 8 எண்ணிக்கைகளின் மொத்த தொகையாக ரூ.1,02,80,000/– (ரூபாய் ஒரு கோடியே இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்)க்கு கொள்முதல் செய்யவும்,
2. முதல் இனம் ஏற்கப்படின், திருவாளர்கள். ஜி.எஸ். பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினருக்கு பணியாணை வழங்கவும்,
3. திருவாளர்கள். ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து ஒப்ப மொத்த தொகையில் 2 சதவிகிதம் பாதுகாப்பு தொகையாக வங்கி உத்தரவாதம் பெற்றுக் கொண்டு உடன்படிக்கை செய்து கொள்ளவும்,
4. சேசிஸின் மேல் பொருத்தப்பட்ட நாய் பிடிக்கும் வாகனங்கள் நிரந்தர பதிவு செய்து சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட பின் மொத்த விலையில் 90 சதவிகித தொகையை, காசோலையாக வழங்கவும்,
5. எஞ்சியுள்ள மொத்த தொகையின் 10 சதவிகித தொகையை, வாகனம் இயக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குப் பிறகு வாகன செயல்திறன் திருப்திகர சான்றிதழ் உரிய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டபின் வழங்கவும்,
6. வாகனங்களின் நிரந்தரப் பதிவு, தகுதி சான்றிதழ், சாலை வரி, மற்றும் நடை வழிக் காப்பீடு ஆகியவைகளை மேற்கொண்டபின், இவைகளுக்கான உரிய செலவு சீட்டுகள் திருவாளர்கள். ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டபின், அத்தொகையை திருப்பி வழங்கவும்,
7. மேற்கண்ட இச்செலவீனத்தை (ரூ.1,02,80,000/–) சுகாதாரத் துறை – கால் நடை மருத்துவ பிரிவு – 2012–2013 ஆம் ஆண்டு மூலதன கணக்கில் கூடுதல் நிதியாக ஒதுக்கீடு செய்து வழங்கவும்,

மேற்படி 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி ) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 279/ 2012 நாள் 17.10.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘ 19.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 332/2012 நாள் 19.10.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**இ.பொ.து.ம.லா.நி / 351 /2012**
**ஆணையர் அவர்களின் 17.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.481/2012 **பொருள் எண்.40**

**மத்திய லாரி நிலையத்தில் உள்ள 135 கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு ஒருதொகுப்பாக மறு ஒப்பம் ஏலம் தீர்வு செய்தல்**

இயந்திரப் பொறியியல் துறையில் 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு பொருளாதார ரீதியில் பழுது பார்த்து மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையை அடைந்த 135, கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் இ.பொ.து. ம. லா.நி. / 002/ 11ன் 11.04.2012ம்; அன்று நடத்தப்பட்ட ஒப்ப ஏலத்தில் 41 வாகனங்களும் இ.பொ.து. ம.லா.நி/ 333 / 11ன்19.04.2012ம்; அன்று நடத்தப்பட்ட ஒப்ப ஏலத்தில் 64 வாகனங்களும் இ.பொ.து. ம.லா.நி/ 065 / 11ன் 21.06.2012ம்;அன்று நடத்தப்பட்ட ஒப்ப ஏலத்தில் 34 வாகனங்களை சேர்த்து 139 வாகனங்களுக்கு ஒப்ப ஏலம் நடத்தப்பட்டது. அதில் 4 வாகனங்களுக்கு ஒப்ப ஏலத்தில் கோரப்பட்ட தொகை, தொழிற்நுட்ப குழுவால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட குறைவாக கோரப்பட்டதால், 135 வாகனங்களுக்கு ஏலதாரர்களால் ஏலத்தில் கோரப்பட்ட விலைக்கு வாகனங்களை ஒப்படைக்க உத்தரவு வேண்டி கோப்பு பரிந்துரைக்கப்பட்டது.

இதில் முதல் இரண்டு கோப்பிற்கும் ( கோப்பு எண் ம.லா.நி/ 002 /11 மற்றும் ம.லா.நி/ 333 /11) 25.07.2012 அன்று நடந்த மன்றத்தின் சதாரண கூட்டத்தில் (பொருள் எண் 20), தீர்மான எண் 249 /2012 மற்றும் (பொருள் எண் 21) தீர்மான எண் 250/2012ன் மூலம் 104 வாகனங்களுக்கு மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இ.பொ.து.ந.க.எண்.ம.லா.நி /065 /2011 கோப்பிற்கு 16.08.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில், (பொருள் எண் 02) தீர்மான எண் 167 /12ன் மூலம் இக்கோப்பின் பரிந்துரைக்கப்பட்ட 31 வாகனங்களும் ஒரே ஒரு ஒப்பந்ததாரர் பங்கேற்றுக் கொண்டதால் மறு ஒப்பம் கோரலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், இம்மூன்று ஏலம் சம்பந்தமாக பல கோரிக்கைகள் மற்றும் மனுக்கள் பெறப்பட்டுள்ளதால், இதற்கு முன் நடத்தப்பட்ட 135 வாகனங்களுக்கான ஒப்ப ஏலத்தில் அதிகப்படியாக கோரிய விலைப்புள்ளிகள் நிலுவையில் வைத்து வாகனங்களை தனித்தனியாக மறு ஒப்பம் ஏலம் கோரலாம் என்று அறிவுறுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இம் மறு ஒப்ப ஏலத்தில் அளிக்கப்படவுள்ள விலைப்புள்ளிகளை வைத்து, அதே, வாகனங்களுக்கு இதற்கு முன்னதாக அளிக்கப்பட்ட அதிகப்படியான விலைப்புள்ளிகளை ஒப்பிட்டு இவ்விரண்டில் அதிக விலைப்புள்ளிகள் அளிப்பவர்களுக்கே ஒப்ப ஏலம் பரிந்துரைக்கப்படும் என 12.09.2012 அன்று தமிழ் நாளேடுகளில் வெளியிடப்பட்டது.

14.09.2012 அன்று நடத்தப்பட்ட மறு ஒப்ப ஏலம் குறுகிய காலமே உள்ளதால் முன்னதாக இவ்வாகனங்களில் பங்கு பெற்ற அனைத்து ஏலதாரர்களுக்கும் (குறுந்தகவல் சேவை) எஸ்.எம்.எஸ். மூலம் தகவல் அளிக்கப்பட்டது. மேலும், ஒப்ப படிவங்கள் இணைய தளத்தில் இலவசமாக பெற்றுக்கொள்ளவும், ஒப்பந்ததாரர்கள் ஒப்ப நமுனாவுடன் கோரும் ஒப்பந்தப்புள்ளியின் முழுத்தொகைக்கு 20% முன்வைப்பு தொகை கோப்பு காசோலையுடன் 14.09.2012 அன்று காலை 10.00 மணிக்குள்ளும், ஏலத்தில் பங்கு பெறுவோர் ஒப்ப ஏல நமூனாவுடன் ரூ. 25,000/– (திரும்ப அளிக்கப்படும்) 14.09.2012 அன்று காலை 11.00 மணி அளவில் ரிப்பன் மாளிகை, சுதந்திரப் பொன் விழா ஆண்டு கட்டிடத்தில் காவலர்கள் முன் நிலையில் மறு ஒப்ப ஏலம் நடத்தப்பட்டது. இதற்கிடையில் இதற்கு முன் ஒப்ப ஏலத்தில் பங்கு பெற்றவர்கள் உயர் நீதி மன்றத்தில் 25010/12; 25011/12 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

14.09.2012 அன்று நடத்தப்பட்ட ஏலத்தில் 75 ஏலதாரர்கள் பங்கு கொண்டனர். ஏலம் முடிந்த பிறகு ஒப்பந்தப்பெட்டியை திறந்து பார்க்கும்பொழுது ஒப்பந்ததாரர் எவரும் பங்கேற்கவில்லை. இதற்கு முன் நடத்தப்பட்ட ஏலத்தில் ஒவ்வொரு வாகனத்திற்கும் அளிக்கப்பட்ட அதிக விலையை அடிப்படை விலையாக வைத்து ஏலம் கோரப்பட்டது. ஏலதாரர்கள் அளித்த விலைப்புள்ளிகளை ஏலக்குழு அங்கத்தினரால் குறிக்கப்பட்டு அதில் அனைத்து வாகனங்களுக்கும் உயர்ந்த விலை கோரியுள்ளார்கள்.

மேற்கண்ட 135 வாகனங்கள் ஒவ்வொன்றுக்கும் இதற்கு முன் நடத்தப்பட்ட மூன்று தனித்தனி ஏலத்தில் மொத்த மதிப்பு ரூ.62,12,700/–. 14.09.2012 அன்று நடத்தப்பட்ட மறு ஒப்ப

ஏலத்தில் **135** வாகனங்களை வாங்குவதற்கு ஏலதாரர்கள் கோரியவிலை ரூ.**68,78,800/–**. இக்கோப்பு நிலைக்குழு பணிகள் மூலமாக (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரையுடன் மன்றத்தின் அனுமதிவேண்டி சமர்ப்பிக்கப்பட்டதில் **20–09–2012** அன்று நடந்த நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டு நடவடிக்கையில் பொருள் எண்.**25**ல், இப்பொருளில் குறிப்பிட்ட ஒப்பந்ததாரர்கள் மட்டுமே கலந்து கொண்டு இருப்பதால் சென்னை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறதினால் மறு ஒப்பம் கோரினால் சென்னை மாநகராட்சிக்கு வருவாய் பெருக்கம் எழும் என்று பெரும்பான்மை மன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்ததின் அடிப்படையில் மீண்டும் மறு ஒப்பம் கோரலாம் என்று கூறி நிலைக்குழு (வ.வி.ம.நி.) இப்பொருளினை ஒத்தி வைத்துள்ளது. எனவே, இம்மறு ஒப்ப ஏலத்தை ரத்து செய்து மறு ஒப்ப ஏலம் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் **135** வாகனங்களும் ஒரே தொகுப்பாக **12–10–2012** அன்று ஒப்பமும் **15–10–2012** அன்று நடத்தப்பட்ட ஏலத்தில் **74** ஏலதாரர்கள் பங்குகொண்டனர். இவ் ஏலத்தில் கீழ்காணும் **135** வாகனங்களுக்கு திருவாளர். A.M.Enterprises அவர்கள் அதிக விலையாக **ரூ.1,26,78,000/–(ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஆறு லட்சத்து எழுபத்து எட்டாயிரம்)** கோரியுள்ளார். ஏலம் முடிந்த பிறகு ஒப்பந்தப்பெட்டியை திறந்து பார்க்கும் பொழுது மூன்று ஒப்பந்ததாரர்கள் பங்கேற்று உள்ளனர். ஒப்பந்ததாரர்கள் கோரியவிலை ஏலதாரர் கோரிய விலையை விட குறைவாக இருந்ததினால் ஏலதாரர் திருவாளர் A.M.Enterprises அவர்களுக்கு **135** வாகனங்களை ரூ.**1,26,78,000/–** ஒரே தொகுப்பாக வழங்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது. இத்தொகை இதற்கு முன் நடந்த ஒப்ப ஏலத்தொகையான ரூ.**68,78,800/–** விட மிக அதிகமாக உள்ளது.

எனவே,

1. மத்திய லாரி நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள **135** கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் (ஒரு தொகுப்பாக) அனைத்தும் **10** ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு பொருளாதார ரீதியில் பழுது பார்த்து மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதால் **15.10.2012** அன்று நடத்தப்பட்ட மறு ஒப்ப ஏலத்தில் கோரிய விலைக்கு கீழ்கண்ட இவ்வாகனங்களை கழிவு செய்யவும்.
2. கழிவு செய்யப்பட்ட **135** வாகனங்களை விற்பனை செய்யும் பொருட்டு இதற்கு முன் நடந்த ஏலத்தில் ஒவ்வொருவாகனத்திற்கும் அதிகப்படியான கோரிய மதிப்பு (மொத்தம் ரூ. **68,78,800/–**) விட **15.10.2012** அன்று நடத்தப்பட்ட மறு ஏலத்தில் கோரிய மதிப்பு (மொத்தம் ரூபாய் **1,26,78,000/–** ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஆறு லட்சத்து எழுபத்து எட்டாயிரம்) ரூபாய் **57,99,200/–** அதிகப்படியாக உள்ளதால் கீழ்க்கண்ட இவ்வாகனங்களை உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யவும்.

| வ எண் | வாகன பதிவு எண் |
|---|---|
| 1. | TN04F 6076 - அசோக்லைலாண்டு |
| 2. | TN04E 3164 - அசோக்லைலாண்டு |
| 3. | TN04 B 3629 - அசோக்லைலாண்டு |
| 4. | TN04B 2914 - அசோக்லைலாண்டு |
| 5. | TN04 F 6374 - அசோக்லைலாண்டு |
| 6. | TN04F 6077 - அசோக்லைலாண்டு |
| 7. | TN04F 6072 - அசோக்லைலாண்டு |
| 8. | TN04B – 8236 - டாடா 608 |
| 9. | TN04E – 3509 - சுராஜ் மஸ்தா |
| 10. | TN04B – 4390 - அம்பாசிட்டர் |
| 11. | TN04C - 0385 - அம்பாசிட்டர் |
| 12. | TN04B – 3627 - அசோக்லைலாண்டு |
| 13. | TN04E – 3062 - சுராஜ் மஸ்தா |
| 14. | TN04B – 3527 - அசோக்லைலாண்டு |
| 15. | TN04B – 3615 - அசோக்லைலாண்டு |
| 16. | TN04F – 6393 - அசோக்லைலாண்டு |
| 17. | TN04B - 4512 - அசோக்லைலாண்டு |

| | |
|---|---|
| 18. | TN04B -2868 - அசோக்லைலாண்டு |
| 19. | TN04B – 7922 - அசோக்லைலாண்டு |
| 20. | TN04G -0035 - அசோக்லைலாண்டு |
| 21. | TSC - 2794 - அசோக்லைலாண்டு |
| 22. | TCZ - 9623 டாடா பென்ஸ் |
| 23. | TN04A – 0616 டாடா பென்ஸ் |
| 24. | TN04C - 1086 அசோக்லைலாண்டு |
| 25. | TN04 - 9836 அசோக்லைலாண்டு |
| 26. | TN04B – 7838 டாடா 608 |
| 27. | TN04C - 4126 டாடா 608 |
| 28. | TN04B – 6055 டாடா 608 |
| 29. | TN04C - 4151 டாடா 608 |
| 30. | TN04B -1286 டாடா 709 |
| 31. | TN04B – 6140 டாடா 608 |
| 32. | TN04B – 8228 டாடா 608 |
| 33. | TN04B – 7267 டாடா 608 |
| 34. | TN04E – 3533 சுராஜ் மஸ்தா |
| 35. | TN04F – 9714 சுராஜ் மஸ்தா |
| 36. | TN04F – 9720 சுராஜ் மஸ்தா |
| 37. | TN04G - 0036 அசோக்லைலாண்டு |
| 38. | TN04D - 6393 அன்ட்டர் |
| 39. | TN04A – 9678 மகேந்திரா |
| 40. | TN04B – 7288 டெம்போ டிராக்ஸ் |
| 41. | TN04E – 8542 மாருதி |
| 42. | TN04 -9008 மாருதி |
| 43. | TN04A – 9519 மாருதி |
| 44. | TN04A – 9517 மாருதி |
| 45. | TN04 - 1212 மாருதி |
| 46. | TN04 9024 மாருதி |
| 47. | TN04E 8550 மாருதி |
| 48. | TN04E – 8543 மாருதி |
| 49. | TN04E - 8551 மாருதி |
| 50. | TN04E 8544 மாருதி |
| 51. | TN04E 8546 மாருதி |
| 52. | TN04B 2132 மகேந்திரா |
| 53. | TN07K 0002 அம்பாசிட்டர் |
| 54. | TN09S 2345 அம்பாசிட்டர் |
| 55. | TN01R 0003 அம்பாசிட்டர் |
| 56. | TN04B 7792 டெம்போ டிராவலர் |
| 57. | TN04 8421 சுராஜ் மஸ்தா |
| 58. | TN04D 0953 மேட்டடார் |
| 59. | TN04F 9552 மகேந்திரா |
| 60. | TN04F 9551 மகேந்திரா |
| 61. | TN04D-7481 மகேந்திரா |
| 62. | TN04F 9553 மகேந்திரா |
| 63. | TN04B 7266 டாடா 608 |
| 64. | TN04Y 1741 டெம்போ டிராவலர் |
| 65. | TN04F 8849 சுராஜ் மஸ்தா |
| 66. | TN04A 1142 அசோக்லைலாண்டு |

| | |
|---|---|
| 67. | TN04B 4168 அசோக்லைலாண்டு |
| 68. | TN04C 1061 அசோக்லைலாண்டு |
| 69. | TN04C 1088 அசோக்லைலாண்டு |
| 70. | TN04F 5512 அசோக்லைலாண்டு |
| 71. | TN04B 7923 அசோக்லைலாண்டு |
| 72. | TN04B 6925 டாடா **608** |
| 73. | TN04F – 5511 அசோக்லைலாண்டு |
| 74. | TN04B – 3474 அசோக்லைலாண்டு |
| 75. | TN04F – 5686 அசோக்லைலாண்டு |
| 76. | TN04B – 3421 அசோக்லைலாண்டு |
| 77. | TN04B – 7837 டெம்போ டிராக்ஸ் |
| 78. | TN04B – 4255 மகேந்திரா |
| 79. | TN04B – 6613 டெம்போ டிராக்ஸ் |
| 80. | TN04F – 9533 மகேந்திரா |
| 81. | TN04B – 0331 மகேந்திரா |
| 82. | TN04 - 8335 சுராஜ் மஸ்தா |
| 83. | TN04F – 9207 சுராஜ் மஸ்தா |
| 84. | TN04F – 9202 சுராஜ் மஸ்தா |
| 85. | TN04H - 4161 சுராஜ் மஸ்தா |
| 86. | TN04H - 4162 சுராஜ் மஸ்தா |
| 87. | TN04H - 4981 சுராஜ் மஸ்தா |
| 88. | TN04H - 4156 சுராஜ் மஸ்தா |
| 89. | TN04F – 9506 சுராஜ் மஸ்தா |
| 90. | TN04F – 9205 சுராஜ் மஸ்தா |
| 91. | TN04H - 4165 சுராஜ் மஸ்தா |
| 92. | TN04F – 8840 சுராஜ் மஸ்தா |
| 93. | TN04F -9709 சுராஜ் மஸ்தா |
| 94. | TN04H - 1936 சுராஜ் மஸ்தா |
| 95. | TN04E – 8456 சுராஜ் மஸ்தா |
| 96. | TN04 - 7414 டாடா |
| 97. | TN04B – 3269 அசோக்லைலாண்டு |
| 98. | TN04A - **0573** அசோக்லைலாண்டு |
| 99. | TN04B – 4056 அசோக்லைலாண்டு |
| 100. | TN04B- 3369 அசோக்லைலாண்டு |
| 101. | TN04B – 4057 அசோக்லைலாண்டு |
| 102. | TN04B – 3516 அசோக்லைலாண்டு |
| 103. | TN04F – 5415 அசோக்லைலாண்டு |
| 104. | TN04F – 6081 அசோக்லைலாண்டு |
| 105. | TN04B – 3158 அசோக்லைலாண்டு |
| 106. | TN04B – 3426 அசோக்லைலாண்டு |
| 107. | TMH - 923 அசோக்லைலாண்டு |
| 108. | TMH - 8180 அசோக்லைலாண்டு |
| 109. | TN04F- 5497 அசோக்லைலாண்டு |
| 110. | TN04B – 3641 அசோக்லைலாண்டு |
| 111. | TN04F - 5504 அசோக்லைலாண்டு |
| 112. | TN04F – 6376 அசோக்லைலாண்டு |
| 113. | TN04F – 6401 அசோக்லைலாண்டு |
| 114. | TN04B – 2813 அசோக்லைலாண்டு |
| 115. | TN04A – **1317** அசோக்லைலாண்டு |

| | |
|---|---|
| **116.** | TN04F – 5495 அசோக்லைலாண்டு |
| **117.** | TN04E – 3653 அசோக்லைலாண்டு |
| **118.** | TN04H - 4160 சுராஜ் மஸ்தா |
| **119.** | TN04F – 9203 சுராஜ் மஸ்தா |
| **120.** | TN04H - 3172 சுராஜ் மஸ்தா |
| **121.** | TN04F- 8844 சுராஜ் மஸ்தா |
| **122.** | TN04F – 9212 சுராஜ் மஸ்தா |
| **123.** | TN04F – 8458 சுராஜ் மஸ்தா |
| **124.** | TN04F – 4155 சுராஜ் மஸ்தா |
| **125.** | TN04F – 9505 மகேந்திரா |
| **126.** | TN04D - 6974 மகேந்திரா |
| **127.** | TN04D - 5984 மகேந்திரா |
| **128.** | TN04F – 9502 மகேந்திரா |
| **129.** | TN04F – 9535 மகேந்திரா |
| **130.** | TN04B – 1594 மகேந்திரா |
| **131.** | TN04B – 2093 மகேந்திரா |
| **132.** | TN04B – 2094 மகேந்திரா |
| **133.** | TSC - 1212 அம்பாசிட்டர் |
| **134.** | TN04B – 5836 டாடா **608** |
| **135.** | TN04D - 1291 டாடா **608** |

3. மேற்கண்ட **135** கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் அனைத்தையும் விற்பனை செய்யும் பொருட்டு ஏற்கனவே, நடந்த ஒப்ப ஏலத்தில் பங்கு பெற்ற ஏலதாரர்கள் செலுத்திய **20%** ஒப்ப வைப்பு தொகையை திரும்ப அளிக்கவும்.
4. இதற்கு முன் நடந்த ஏலத்தில் **25.07.2012** அன்று நடந்த மன்றத்தில் சதாரண கூட்டத்தில் (பொருள் எண் **20**) தீர்மான எண் **249/ 2012** மற்றும் (பொருள் எண் **21**) தீர்மான எண் **250/ 2012**–ன் மூலம் **104** வாகனங்களுக்கு, மன்றதீர்மானத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்யவும்.
5. மேற்கண்ட **135** கனரக மற்றும் இலகு ரக வாகனங்கள் அனைத்திற்கும் அளிக்கப்பட வேண்டிய **20%** ஒப்ப வைப்பு தொகை ரூ.**25,50,000/–** திருவாளர் A.M.Enterprices அளித்துள்ளார்.
6. மேற்கண்ட **135** கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் அனைத்தையும் விற்பனை செய்யும் பொருட்டு மறு ஒப்ப–ஏலம் முடிந்தவுடன் ஒப்பவைப்புத் தொகையை **20%** சரிக்கட்டி மீதம் செலுத்த வேண்டிய விலைத்தொகையுடன் விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமுலில் உள்ள விற்பனை வரியையும் மொத்த விலைக்கு தனித்தனியாக செலுத்து சீட்டு மூலம் சென்னை மாநராகாட்சி கரூவூலத்தில் செலுத்தி அனுமதி பெற்ற பின்னர், இவ்வாகனங்களை கொண்டு செல்லவும்.

மேற்கண்ட இனங்களின் மேல் **1** முதல் **6** வரையுள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் (வரிவதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''**17.10.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். **280/ 2012** நாள் **17.10.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

'' **19.10.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். **337/2012** நாள் **19.10.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>தி.க.மே.து.ந.க.எண்.அ7/5770/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 17.10.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.482/2012 **பொருள் எண்.41**

**<u>குப்பை கொட்டும் வளாகத்திற்காக தேவைப்படும் நிலத்தை சென்னை மாநகராட்சிக்கு நிலம் உரிமை மாற்றம் கோரி காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர்களுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.</u>**

கடந்த நவம்பர் 2011ஆம் ஆண்டிலிருந்து சென்னை மாநகராட்சியின் எல்லை 174 சதுர கிலோ மீட்டரிலிருந்து 426 சதுர கிலோ மீட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன் காரணமாக தற்போது நாள்தோறும் உருவாகும் குப்பையின் அளவும் 3500 மெட்ரிக் டன்னிலிருந்து 4500 மெட்ரிக் டன் என்று அதிகரித்துள்ளது. இவ்வாறு சென்னை மாநகரில் உருவாகும் குப்பைகள் கொடுங்கையூரிலும் பெருங்குடியிலும் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்பட்டு வருகிறது. இந்த குப்பை கொட்டும் வளாகங்கள் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த குப்பை கொட்டும் வளாகத்தை சுற்றி குடியிருப்புப் பகுதிகள் அதிகமாக உருவாகியுள்ளன. மேலும் வணிக நடவடிக்கைகளும் இந்த பகுதிகளில் அதிகமாகி வருகின்றன. இதனால் இந்த பகுதியில் உள்ள மக்கள் குப்பை கொட்டும் வளாகங்களினால் சுகாதார சீர்கேடும், சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏற்படுவதாக தொடர்ந்து புகார்களை எழுப்பிய வண்ணம் இருக்கின்றனர். மேலும், பெருங்குடியில் உள்ள குப்பைகொட்டும் வளாகம் சதுப்பு நிலப்பகுதிக்கு அருகில் உள்ளதால், சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் அங்கு குப்பை கொட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். எனவே கீழ்காணும் இனங்களுக்கு ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டங்களை தனியார் பங்களிப்புடன் செயலாக்க சென்னை மாநகராட்சி முடிவெடுத்தது.

(1) திடக்கழிவுகளை பதனிடுதலுக்கு உட்படுத்துதல்

(2) கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைத்தல் மற்றும் அறிவியல் ரீதியில் அவைகளை ஒரு குறிப்பிட்ட காலகெடுவிற்குள் மூடுதல்

(3) நகராட்சி திடக்கழிவுகளை சேகரித்தல் அவற்றை குப்பை பதனிடும் திட்ட வளாகத்திற்கு போக்குவரத்து செய்தல்.

தற்போது பயன்பாட்டில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்கள் சீரமைக்கப்பட்டு மூடப்படவேண்டும் என்பதாலும், மேலும் அவற்றை பயன்படுத்துவது குறித்து உயர்நீதி மன்றத்தில் பொதுநல வழக்குகள் நிலுவையில் உள்ளதாலும், குப்பைகளை பதனிடுதலுக்கு உட்படுத்தவும், மற்றும் பதனிடுதலுக்கு உட்படுத்தப்பட இயலாத மற்றும் பதனிடுதலில் உருவாகும் கூளக்கழிவுகள் (inert waste) ஆகியவற்றை களைவதற்கு சுகாதார குப்பைகொட்டும் தளங்கள் அமைக்கவும், புதியதாக நிலப்பரப்பு சென்னை மாநகராட்சிக்கு தேவைப்படுகிறது.

மேலும், 30.04.2012 அன்று தலைமை செயலகத்தில், தமிழக அரசின் தலைமை செயலர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சென்னை மாநகருக்கு அருகில் குப்பை பதனிடும் திட்டத்தை செயலாக்கவும் மற்றும் கூளக்கழிவுகளை களைவதற்கு சுகாதார குப்பை கொட்டும் தளங்களை அமைக்கவும், புதிய பொருத்தமான நிலப்பரப்புகளை பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள சென்னை மாநகராட்சிக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

அதன்படி, குப்பை பதனிடுதல் திட்டத்தை செயல்படுத்தவும் சுகாதார குப்பை கொட்டும் தளங்களை அமைக்கவும், காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் சென்னை மாநகர எல்லையிலிருந்து சுமார் 30லிருந்து 50 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள பல்வேறு நிலப்பகுதிகள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் மற்றும் அவர்களது அலுவலர்களுடன் கூட்டாக தல ஆய்வு செய்யப்பட்டது. இந்த தல ஆய்வில் கீழ்வரும் நிலப்பரப்புகள் குப்பை பதனிடுதல் திட்டத்தை செயலாக்கவும், சுகாதார குப்பை கொட்டும் தளங்களை அமைக்கவும் பொருத்தமானதாக இருக்கும் என்று கருதப்பட்டது.

<table>
<tr><td>புல எண்கள்</td><td>அமைவிடம்</td><td>பரப்பளவு</td><td>நிலத்தின் வகைபாடு</td><td>குறிப்பு</td></tr>
<tr><td>புல எண். 255 மற்றும் 240/B</td><td>மலைபட்டு கிராமம் ஸ்ரீபெரும்பதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்</td><td>73.47 ஏக்கர்</td><td>மேய்க்கால் புறம்போக்கு</td><td>சென்னை மாநகர எல்லையிலிருந்து 56 – 60 கி.மீ</td></tr>
<tr><td>புல எண். 820/1C</td><td>குத்தம்பாக்கம் கிராமம், பூவிருந்தவல்லி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்</td><td>99.61 ஏக்கர்</td><td>மேய்க்கால் புறம்போக்கு</td><td>சென்னை மாநகர எல்லையிலிருந்து 30 கி.மீ.</td></tr>
<tr><td>புல எண்.416/1, 416/2, 3, 6A, 6B. 417/1A, 1B, 419/3, 4</td><td>மீஞ்சூர்-II கிராமம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்</td><td rowspan="3">19.98 ஏக்கர்</td><td>நன்செய் அனாதினம் புறம்போக்கு</td><td rowspan="3">சென்னை மாநகர எல்லையிலிருந்து 28 கி.மீ.</td></tr>
<tr><td>புல எண்.416/1A, 4B, 5, 418/1A, 1B, 1C, 419/1, 2B, 2A</td><td>மீஞ்சூர்-II கிராமம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்</td><td>புன்செய் அனாதினம் புறம்போக்கு</td></tr>
<tr><td>புல எண்.416/7</td><td>மீஞ்சூர்-II கிராமம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்</td><td>வெண் தாமரை குளம் (நெடுஞ்சாலை துறை)</td></tr>
<tr><td>புல எண்.486/4</td><td>வள்ளுர்-II கிராமம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்</td><td>47.13</td><td>நன்செய்</td><td>பட்டா நிலம் அருள்மிகு திருமங்கேஸ்வரர் சுவாமி, மேலூர்.</td></tr>
</table>

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குத்தம்பாக்கம், மீஞ்சூர் II மற்றும் வள்ளூர் II கிராமங்களில் உள்ள நிலத்தை சென்னை மாநகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்க மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களுக்கும் மற்றும் மலைபட்டு கிராமத்தில் உள்ள நிலத்தை சென்னை மாநகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்க மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்கும் 03.07.2012 அன்று முன்மொழிவுகள் அனுப்பப்பட்டன. சென்னை மாநகராட்சி ஏற்கனவே குப்பை பதனிடுதல் திட்டங்களை செயலாக்குதல் மற்றும் பயன்பாட்டில் உள்ள கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைத்தல் ஆகிய திட்டங்களை செயலாக்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு ஆர்வம் காட்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுவிட்டதால், இந்த திட்டத்தை செயலாக்க புதிய நிலங்களை அவசரமாக தேர்வு செய்ய வேண்டிய நிலை இருந்ததால், மேற்சொன்ன முன்மொழிவுகள் மேற்சொன்ன மாவட்ட ஆட்சியர்களுக்கு மாமன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு அனுப்பப்பட்டது.

எனவே, குத்தம்பாக்கம், மீஞ்சூர் II மற்றும் வள்ளூர் II கிராமங்களில் உள்ள நிலத்தை சென்னை மாநகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்க திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர்க்கும், மலைபட்டு கிராமத்தில் உள்ள நிலத்தை சென்னை மாநகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்க காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியருக்கும் 03.07.2012 அன்று முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 277/ 2012 நாள் 17.10.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.
>
> ‘‘ 19.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 336/2012 நாள் 19.10.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.10.வ.து.ஆர்2/1480/2012**
**ஆணையர் அவர்களின் 14.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.**483/2012** **பொருள் எண்.42**

**சென்னை மாநகராட்சி – வருவாய்துறை – மண்டலம் 10 – கோட்டம் 134, டாக்டர் அம்பேத்கார் சாலையில் உள்ள சமூக கூடம் – நன்கொடையாக வழங்கப்பட்ட பொருட்களை பொது மக்கள் உபயோகப்படுத்துவதற்கு பின்னேற்பு அனுமதி.**

சென்னை மநகராட்சி, வருவாய்துறை, மண்டலம் 10, கோட்டம் 134 அம்பேத்கார் சாலையில் உள்ள சமூக கூடத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு பொது மக்கள் பயன்பெறும் வண்ணம் நன்கொடையாக நாற்காலிகள், மேசை, பாத்திரங்கள் போன்றவற்றை வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் முன்னிலையில் மண்டல குழு தலைவர், மண்டலம் 10 அவர்களால் நன்கொடையாக 22.03.2012 நாளன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் வழங்கப்பட்டது.

மேற்படி நன்கொடையாக வழங்கப்பட்ட பொருள்களின் விவரம், பொருட்களின் எண்ணிக்கை, விலை விவரப் பட்டி போன்ற விவரங்கள் சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என மண்டல அலவலர்–10 அவர்களின் 30.03.2012 கடிதம் மூலம் மண்டல குழு தலைவர்–10 அவர்களிடம் கோரப்பட்டது. அதன்படி 04.04.2012 அன்று மேற்கண்ட நன்கொடை பொருட்கள் பெறப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் இதனை பெற்று கொண்டமைக்கு அனுமதிக்குமாறு கோப்பு அனுப்பப்பட்டது. இதனை பெற்றுக் கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறுமாறு தெரிவிக்கப்பட்டது.

**எனவே,**

அ) பொது மக்கள் பயன்பெறும் வண்ணம் நன்கொடையாக நாற்காலிகள், மேசை, பாத்திரங்கள் போன்றவற்றை வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் முன்னிலையில் மண்டல குழு தலைவர், மண்டலம் 10 அவர்களால் நன்கொடையாக 22.03.2012 அன்று பெறப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,

ஆ) அவ்வாறு நன்கொடையாக பெறப்பட்ட பொருள்களை மக்கள் உபயோகத்திற்கு வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதியும்,

இ) மேற்படி நன்கொடையாக பெறப்பட்ட பொருள்களை மக்கள் உயோகத்திற்கு வழங்கும்போது காணாமல் போனாலோ அல்லது உடைக்கப்பட்டாலோ ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்யும் பொருட்டு ஏற்கனவே பெறப்படும் காப்பீட்டுத் தொகை ரூ10,000/–ஐ உயர்த்தி ரூ.20,000/– (ரூபாய் இருபது ஆயிரம் மட்டும்) ஆக பெறவும்,

மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''19.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.316/2012 நாள்.19.10.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**வ.து.ந. க. எண் ஜி1/ 5845 /2012**
**ஆணையர் அவர்களின் 12.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.484/2012 **பொருள் எண்.43**

**சொத்து வரி நிலுவைத் தொகையை முழுமையாக வசூலிக்கவும் மற்றும் சொத்து வரி வசூலை மேம்படுத்தவும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அனுமதி**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் தலைமையில் ஆணையர் மற்றும் கூடுதல் ஆணையர் (வ.ம.நி) அவர்களுடன் 11.09.2012 அன்று நடந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் சொத்து வரியை முறையாகச் செலுத்தாதவர்களை நிலுவையின்றி சொத்து வரி செலுத்த வைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையாக, சென்னை குடிநீர் மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வரி மற்றும் மின்சாரக் கட்டணம் செலுத்தாதவர்களுக்கு அபராதக் கட்டணம் வசூலிப்பு, மேலும் குடிநீர் இணைப்பு மற்றும் கழிவு நீர் இணைப்பு துண்டிக்கப்படுவதைப் போன்று சென்னை மாநகராட்சிக்கு சொத்து வரி செலுத்தாதவர்களின் வீட்டுக் குடிநீர் இணைப்பு மற்றும் கழிவுநீர் இணைப்பும் துண்டிக்கப்படும் என்ற வகையில் நடவடிக்கை எடுக்க ஒப்புதல் கோரி அரசுக்கு முன்மொழிவு அனுப்ப வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சியின் எல்லை விரிவாக்கத்திற்கு முன்பு 6.62 லட்சங்களாக இருந்த மொத்த சொத்து வரி விதிப்புகளின் எண்ணிக்கை எல்லை விரிவாக்கத்திற்குப் பிறகு 10.71 லட்சமாக உயர்ந்துள்ள நிலையில், தாமாக முன்வந்து அரையாண்டுதோறும் சொத்து வரியை முறையாக செலுத்துபவர்களைத் தவிர, முறையாகச் செலுத்தாமல் பல அரையாண்டுகளுக்கு சொத்து வரி நிலுவையில் வைத்துள்ளவர்களைப் பல முறை நேரில் அணுகியும், நாளிதழ்கள் மற்றும் பண்பலை வானொலி மூலம் சொத்து வரி செலுத்தக் கோரி அறிவிப்பு செய்தும் வரி செலுத்த தவறுவதால், நிர்வாகத்தின் உழைப்புக்கேற்ற பலனுமின்றி மற்றும் கால விரயமும் ஏற்படுவதை இனி வருங்காலங்களில் தவிர்க்க சில வழிமுறைகளைக் கடைபிடித்து சொத்து வரியை நிலுவையின்றி வசூலிக்க வேண்டியது அவசியமாகிறது.

சென்னை மாநகராட்சி நிர்வாகத்தால் பொது மக்களின் நலன் கருதி மேற்கொள்ளப்படும் பல நலத் திட்டங்களைச் செயல்படுத்தத் தேவையான நிதி வருவாயில் சொத்து வரி வசூல் பெரும் பங்கு வகிக்கும் சூழ்நிலையில் சொத்து வரியை நிலுவையின்றி முழுமையான அளவில் வசூலிக்க வேண்டியது அவசியமாகிறது.

பிற அரசு நிர்வாகங்களில் நிலுவை வரி அல்லது கட்டணங்களை நிலுவையின்றி வசூலிக்க சில வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அவற்றில் குறிப்பாக சென்னைக் குடிநீர் மற்றும் தமிழ்நாடு மின்வாரியங்களில் நிர்ணயிக்கப்பட்ட கால கெடுவுக்குள் வரி அல்லது கட்டணம் செலுத்தாதவர்களுக்கு அபராதக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது மற்றும் சேவையும் துண்டிக்கப்படுகிறது.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919 விதி 100ல் வரையறுக்கப்பட்டுள்ளபடி சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களுக்கு அவைகளின் பயன்பாட்டுக்கேற்றபடி அதன் உரிமையாளர் சென்னை மாநகராட்சிக்கு சொத்து வரி செலுத்த வேண்டும். குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் சொத்து வரி செலுத்த தவறியவர்களுக்கு அபராத கட்டணம் வசூலிக்க, மேற்கண்ட விதிகளில் விதிமுறைகள் ஏதும் வரையறுக்கப்படவில்லை.

சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அடங்கிய பகுதிகளில் கட்டப்படும் புதிய கட்டடங்களுக்கு வருவாய்த் துறை மூலமாக சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டு அறிவிப்பு எண் 6 புதிய மதிப்பீடு நோட்டிஸ் வழங்கப்படுகிறது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள மாத வாடகை மதிப்பு மற்றும் ஆண்டு வாடகை மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிட்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் குடிநீர் வரி நிர்ணயம் செய்து குடிநீர் வரி வசூலிக்கப்படுகிறது.

இந்த செயல்பாடுகளின் அடிப்படையில் சென்னை மாநகராட்சி நிர்வாகத்திற்கும் மற்றும் சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கும் இடையே நிர்வாக ரீதியான புரிதல் தொடர்பு உள்ளதால், இனி வருங்காலங்களில் அரையாண்டு முடிவுக்குள் சொத்து வரி செலுத்தத் தவறும் சொத்தின் உரிமையாளர்களின் மீது நடவடிக்கை எடுக்கும் விதமாக மேற்கூறிய

வாரியத்தின் ஒத்துழைப்புடன் சொத்து வரி செலுத்தத் தவறியவர்களின் வீட்டில் உள்ள குடிநீர் இணைப்பும் மற்றும் கழிவு நீர் இணைப்பையும் மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்தின் ஒத்துழைப்புடன் வீட்டின் மின்இணைப்பு துண்டிப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பட்சத்தில் சொத்து வரி நிலுவையின்றி முழுமையாக வசூல் செய்து இலக்கினை எட்ட ஏதுவாகும் எனக் கருதப்படுகிறது.

அதனடிப்படையில் காலக்கெடுவுக்குள் சொத்து வரி செலுத்தத் தவறும் சொத்தின் உரிமையாளர்களின் விவரம் அடங்கிய பட்டியலை சென்னை மாநகராட்சி குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கும் மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கும் அனுப்பி பட்டியலில் குறிப்பிட்டுள்ள சொத்து வரி செலுத்தப்படாத கட்டடங்களில் உள்ள குடிநீர் இணைப்பு, கழிவு நீர் இணைப்பு மற்றும் மின் இணைப்பு துண்டிப்பு செய்ய குடிநீர் வழங்கல், மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்தையும் கேட்டுக் கொள்ளலாம்.

சென்னை மாநகராட்சியில் சொத்து வரி வசூலினை ஒவ்வொரு அரையாண்டிலும் நிலுவையின்றி வசூலித்து ஆண்டுதோறும் நிர்ணயிக்கப்பட்ட சொத்து வரி வசூல் இலக்கினை முழுமையாக எட்டுவதற்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்வாரியம் ஆகியவற்றை மேற்கூறியவாறு உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டு மாநகராட்சி நிர்வாகத்திற்கு உதவும் வகையில் ஆவன செய்ய அரசுக்கு பரிந்துரைத்து இதன் தொடர்பாக அரசு ஆணை வெளியிட கேட்டுக் கொள்ளலாம் எனக் கருதப்படுகிறது,

மேற்கூறிய விவரங்களின் அடிப்படையில், சொத்து வரியை காலக்கெடுவுக்குள் செலுத்தத் தவறும் சொத்து உரிமையாளர்களின் மீது மேற்கொள்ளும் பொருட்டு உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கீழ்க்காணும் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

1. சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ் நாடு மின்சார வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சிக்கும் இடையில் புரிந்துணர்வு அடிப்படையில் சென்னை மாநகராட்சி ஒவ்வொரு அரையாண்டிற்கான காலக்கெடுவுக்குள் சொத்து வரி செலுத்தாதவர்களுக்கு குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு மற்றும் வீட்டின் மின் இணைப்பு துண்டிப்பு செய்யவும்,
2. 15 தினங்களுக்குள் சொத்து வரியை செலுத்தாத சொத்துவரி நிலுவைதாரர்களுக்கு இறுதி வாய்ப்பு வழங்கி, காலகெடுவுக்குள் செலுத்தத் தவறியவர்கள் வீட்டின் குடிநீர் இணைப்பு மற்றும் கழிவு நீர் இணைப்பு மற்றும் வீட்டின் மின் இணைப்பு ஆகியவற்றைத் துண்டிக்கவும்,
3. சொத்து வரியை காலகெடுவுக்குள் செலுத்த தவறியவர்களின் மீது மேற்கொள்ளப் படவுள்ள மேற்கூறிய நடவடிக்கைகளை அனைத்து சொத்து உரிமையாளர்களும் அறியும் வண்ணம் நாளிதழ்களில் அறிவிப்பு செய்யவும் மற்றும் தனித்தனியாக ஒவ்வொரு சொத்து உரிமையாளருக்கும் இத்தகவலை கடிதம் மூலமாக தெரியப்படுத்தவும்,
4. இப்பொருள் குறித்த மேற்காணும் முன்மொழிவுகளை அரசுக்குப் பரிந்துரைத்து, காலகெடுவுக்குள் சொத்து வரி செலுத்தத் தவறும் சொத்தின் உரிமையாளர்களின் விவரம் அடங்கிய பட்டியலை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு அனுப்பி சொத்து வரி செலுத்தப்படாத கட்டடங்களில் உள்ள குடிநீர் இணைப்பு மற்றும் கழிவு நீர் இணைப்புகளைத் துண்டிக்கவும் மற்றும் காலக்கெடுவுக்குள் சொத்துவரி செலுத்தத்தவறும் சொத்து உரிமையாளர்களின் பட்டியலை மின்வாரியத்திற்கு அனுப்பி வீட்டின் மின் இணைப்பை துண்டிக்க செய்யவும் மேற்கூறிய இரு வாரியங்களுக்கும் அனுமதி அளித்து அரசாணை வெளியிட அரசுக்கு பரிந்துரைக்கலாம்.

மேற்காணும் பரிந்துரைகளின் மீது நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் மேலான ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

'' **19.10.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். **335/2012** நாள் **19.10.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.8.வ.து.ந.க.எண்.ஆர்1/1445/2012**
**ஆணையர் அவர்களின் 12.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.485/2012 **பொருள் எண்.44**

**பிரம்மாகுமாரிகள் உலக மறுமலர்ச்சி ஆன்மிக அறக்கட்டளை – சொத்துவரி விலக்களிக்க அனுமதி**

உலக மறுமலர்ச்சி ஆன்மிக அறக்கட்டளை '' சாந்திதாம் இராஜயோக தியான மண்டபம்'' என்ற பெயரில் எண்.96 கியு. பிளாக் 3வது அவின்யு, அண்ணாநகர், சென்னை–40 என்ற விலாசத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க கோரி விண்ணப்பித்துள்ளனர்.

மேற்படி அறக்கட்டளையில் வழிப்பாட்டுத்தளம் தொடர்பான பணிகள் தவிர இதர நிகழ்வுகள் செயல்படுவதாக தெரிவித்து இந்தஅறக்கட்டளை சொத்துவரி செலுத்துவதில் விலக்களிக்க கோரும் கோரிக்கையை ஏற்க இயலாது என ஆணையர் அவர்கள் தெரிவித்து 10–06–2010 நாளிட்ட கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிரம்மா குமாரிகள் உலக மறுமலர்ச்சி ஆன்மிக அறக்கட்டளையின் 15–5–2012 மற்றும் 23–08–2012 நாளிட்ட கடிதத்தில் இவ்விடத்தில் மனித குல ஆன்மிக மேம்பாட்டிற்கு உதவக்கூடிய கல்வியும், தியானமும் மனதை ஒருமுகப்படுத்தும் பயிற்சியும் இலவசமாக கற்றுத்தரப்படுகிறது. இறை பணிக்காக தாமாகவே தமது வாழ்க்கையை அற்பணித்துக் கொள்பவர்களால் செயல்படுத்தப்படுகிறது. இதற்கு தாமாகவே முன்வந்து அளிக்கும் நன்கொடை மூலமாக செலவினங்கள் செய்யப்பட்டு வருகிறது. இதில் எந்தவித கட்டணமும் வசூலிக்கப்படவில்லை. இதில் பணி செய்பவர்களுக்கு எந்தவித ஊதியமும் வழங்கப்படுவதில்லை.

இக்கட்டிடத்தில் ஆன்மிக பணிகள் தவிர இதர நிகழ்வுகள் ஏதும் நடைபெறவில்லை என தெரிவித்து இதன் கிளை அலுவலகங்கள் உள்ள மதுரை, கோவை, ஸ்ரீபெரும்பத்துார், டெல்லி, அஜ்மிர், ஆந்திராவில் உள்ள புரோதத்துார் ஆகிய மாநகராட்சிகளில் சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களித்து கடிதம் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்து மேற்படி தமது ஆன்மிக அறக்கட்டளைக்கும் சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

மேற்படி அறக்கட்டளை சென்னை மாநகராட்சிக்கு 1/93–94 முதல் 1/98–99 வரை ரூ 4450/– வீதம் ரூ.48950/– மற்றும் 2/98–99 முதல் இதுநாள் வரை (2/2011–12 வரை) ரூ.1,84,540 ஆக மொத்தம் ரூ.2,33,490/– சொத்து வரி செலுத்தாமல் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறக்கட்டளை ஆய்வு செய்யப்பட்டதில் இக்கட்டிடம் முழுமையாக இறைவழிப்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் மன அமைதி பயிற்சிகள் (Teaching Raj Yoga Meditation) தொடர்பான பணிகள் மட்டுமே நடைபெறுகின்றன. தரைதளத்தில் தியான மண்டபம், முதல் தளத்தில் பக்தர்களுக்கு பிரசாதம் செய்யும் அறை மற்றும் நிர்வாகத்தின் அலுவலக அறைகள் உள்ளன. இரண்டாம் தளத்தில் தியான மண்டபம் மற்றும் இம்மண்டபத்தில் பணி செய்பவர்கள் மற்றும் வெளியூர்களிலிருந்து பயிற்சிக்கு வருபவர்களின் ஓய்வு அறைகளும் உள்ளன.

இக்கட்டிடத்தில் இறை வழிப்பாட்டு நிகழ்ச்சிகள் தியான பயிற்சிகள் தவிர இதர நிகழ்வுகள் ஏதும் நடைபெறவில்லை என தெரியவருகிறது. இக்கட்டிடத்தின் தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளம் புகைபடம் (Photography)கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் தெரிவித்துக்கொள்வது யாதெனில் இதன் தலைமை அலுவலகம் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள அபுமலையிலும் (மவுண்ட் அபு) இதர பகுதிகளில் கிளை அலுவலகங்களும் செயல்பட்டு வருகிறது. இதில் கோயம்பத்துார் மாநகராட்சி, மதுரை மாநகராட்சி, ஸ்ரீபெரும்பத்துார் நகராட்சி, டில்லி மாநகராட்சி, ஆந்திரா மாநிலம் புரோதத்துார் நகராட்சி அலுவலகங்கள் மேற்படி அறக்கட்டளைக்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களித்து உத்தரவுகள் வழங்கியது தெரியவருகிறது.

மேற்படி கட்டிடம் 1985ம் ஆண்டு திரு.ராஜாபாதர் அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கி புதிய கட்டிடம் கட்டப்பட்டு ஆன்மிகப்பணிக்காக மட்டுமே செயல்பட்டு வருவதாகவும். இதில் எந்தவித கட்டணமோ, லாபம் ஈட்டும் வகையில் எந்தவித வருமானமோ இல்லை என தெரியவருகிறது. இந்நிறுவனத்திற்கு சென்னை மாநகராட்சி விதிகளின்படி சொத்துவரி செலுத்துவதில் விலக்களிக்கலாம்.

எனவே, பழைய வார்டு எண்.66 வரிச் சீட்டு எண். 0226/000 புதிய வார்டு எண்.101, வரிச் சீட்டு எண். 05460–000.எண்.96, கியு பிளாக், 3வது அவின்யு, அண்ணாநகர், சென்னை–40 என்ற விலாசத்தில் செயல்பட்டுவரும் உலக மறுமலர்ச்சி ஆன்மிக அறக்கட்டளை “ சாந்திதாம் இராஜயோக தியான மண்டபத்திற்கு சொத்துவரி 1/93–94 முதல் 2/2011–12 வரை அதன் நிலுவை தொகை ரூ.2,33,490/– செலுத்துவதில் விலக்களிக்கவும் மேலும் சென்னை மாநகராட்சி விதிகளின்படி (CCMC Act 1919 Sec 101) 1/2012-13 முதல் சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க ஆணை வேண்டப்படுகிறது.

எனவே, பிரம்மாகுமாரிகள் உலக மறுமலர்ச்சி ஆன்மிக அறக்கட்டளைக்கு சொத்து வரி மற்றும் நிலுவை தொகை ரூ.2,33,490/– (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பத்தி மூன்றாயிரத்து நானூற்று தொன்னூறு மட்டும்) விலக்களிக்க நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘19.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 334/2012 நாள் 19.10.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>வ.து.ந.க.எண்.தொ.வ.எண்./1420/2012</u>**

**<u>ஆணையர் அவர்களின் 08.10.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.486/2012 **பொருள் எண்.45**

**<u>நிறுமத்திற்கு திருத்திய வரி மிதிப்பீடு</u>**

சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919, பிரிவு எண் 110ன்படி சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இயங்கும் நிறுவனங்களின் முதலீட்டுத் தொகையின் (Paid up Capital) அடிப்படையில் நிறுமம் வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்போது நடைமுறையிலுள்ள வழிமுறையின்படி நிறுவனத்தின் அரையாண்டு நிறுமம் வரியானது கீழ்காணும் அட்டவணையின்படி வசூலிக்கப்பட்டு வருகிறது.

**<u>அட்டவணை</u>**

| வ.எண். | முதலீடு தொகை (இலட்சங்களில்) | அரையாண்டு நிறுமம் வரி |
|---|---|---|
| 1. | ஒரு இலட்சத்திற்கு குறைவாக (ரூ.99,999க்குள்) | ரூ.100/– |
| 2. | ரூபாய் 1,00,000 முதல் ரூபாய் 1,99,999 க்குள் | ரூ.200/– |
| 3. | ரூபாய் 2,00,000 முதல் ரூபாய் 2,99,999 க்குள் | ரூ.300/– |
| 4. | ரூபாய் 3,00,000 முதல் ரூபாய் 4,99,999 க்குள் | ரூ.400/– |
| 5. | ரூபாய் 5,00,000 முதல் ரூபாய் 9,99,999 க்குள் | ரூ.500/– |
| 6. | ரூபாய் 10,00,000 க்கு மேல் | ரூ.1,000/– |

இருப்பினும், ஒரு நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அல்லது முதன்மை அலுவலகம் சென்னை மாநகரத்தில் இல்லாமல் இருந்தால் அந்நிறுவனம் ஈட்டும் மொத்த வருமானம் அல்லது சென்னை மாநகரில் இயங்கும் கிளை நிறுவனத்திலிருந்து ஈட்டப்படும் முந்தைய நிதியாண்டின் மொத்த வருமானத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு நிறுமம் வரி செலுத்தப்பட வேண்டும்.

| வ.எண். | நிறுவனத்தின் மொத்த வருமானம் | அரையாண்டுக்கு செலுத்த வேண்டிய நிறுமம் வரி |
|---|---|---|
| அ. | ரூ.5,000/–க்கு மிகாமல் | ரூ.25/– |
| ஆ. | ரூ.5,001/– முதல் ரூ.10,000/– வரை | ரூ.50/– |
| இ. | ரூ.10,001 /– முதல் ரூ.20,000/– வரை | ரூ.100/– |
| ஈ. | ரூ.20,000/–க்கு மேல் | ரூ.100/– மற்றும் 20,000க்கு மேல் கூடுதலாக உள்ள தொகைக்கும ஒவ்வொரு 5,000/–க்கும் ரூ.25/– வீதம் அதிக பட்சம் ரூ.1000/– |

இருப்பினும் ஒரு நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அல்லது முதன்மை அலுவலகம் சென்னை மாநகரில் இல்லாமல் இருந்தாலும் சென்னை நகரில் இயங்கும் கிளை நிறுவனத்திற்கு முதல் ஆண்டிற்கு நிறுமம் வரி ரூ.25/– செலுத்தப்பட வேண்டும். ஆனால் அந்நிறுவனத்தின் மொத்த வருமானம் அந்த ஆண்டில் ரூ.5000/–க்கு மிகையாக இருப்பதாகக் கண்டறியப்பட்டால் அந்நிறுவனம் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விகிதத்தின்படி முதலில் செலுத்திய ரூ.25/–ஐ கழித்து மீதமுள்ள தொகை செலுத்த வேண்டும்.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919, பிரிவு–98ன்படி ஏதேனும் ஒரு வரியினை முதன் முறையாக விதிக்கவோஅல்லது புதிய விகிதத்தில் மாற்றி அமைக்கவோ மன்றத்தினால் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமானால், ஆணையாளர் இது பற்றி தமிழ்நாடு அரசிதழ் மற்றும் உள்ளூர் தினசரி செய்தித் தாள்களில் வரி விதிப்பதற்கான நோக்கம், மற்றும் இவ்வரி விதிப்பு எந்த தேதியிலிருந்து அமுல்படுத்தப்படவேண்டும் என்று தெரிவித்து இதுகுறித்து ஏதேனும் ஆட்சேபணைகள் இருந்தால் தெரிவிப்பதற்காக ஒரு மாத கால அவகாசம் அளித்து அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் ஏதேனும் ஆட்சேபணைகள் பெறப்பட்டால் அவற்றை பரிசீலித்து மன்றத் தீர்மானத்தின் மூலம் வரி நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அத்தீர்மானத்தில் வரி விகிதங்கள் மற்றும் வரி விதிப்பு எந்தத் தேதியில் இருந்து அமல்படுத்தப்பட வேண்டும் போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

வரி விகிதங்கள் மற்றும் வரி விதிப்பு எந்தத் தேதியில் இருந்து அமல்படுத்தப்பட வேண்டும் போன்ற விவரங்கள் அடங்கிய மன்றத் தீர்மானத்தினை தமிழ்நாடு அரசிதழ் மற்றும் உள்ளூர் தினசரி செய்தித் தாள்களில் தெரிவிக்கப்பட வேண்டும்.

பின்னர் இதுகுறித்து அரசின் அனுமதி பெற்று புதிய விகிதங்களை குறிப்பிட்ட தேதியில் அமல்படுத்தி நிறுமம் வரி விதிப்பினை மேற்கொள்ளலாம்.

இதுகுறித்து சென்னை நகரில் இருக்கும் நிறுவனங்கள், நிறுவனங்களின் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த தகவல்கள் பெறப்பட்டு அவைகளின் முதலீட்டுத் தொகையின் அடிப்படையில் நிறுவனங்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, **1993**ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட நிறும வரி விகிதம் கடந்த பல ஆண்டுகளாக மாற்றியமைக்கப்படாமல் வசூலிக்கப்படுகிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் இந்த வரி விகிதம் மிகவும் குறைந்த அளவே என கருதப்படுவதாலும் மேலும் பல சீரிய நல திட்டப் பணிகளை மாநகராட்சியினால் மேற்கொள்வதற்கு ஏதுவாகவும் மாநகராட்சியின் வருவாய் உயர்த்தும் வகையிலும் தற்போது நடைமுறையிலுள்ள நிறும வரி விகிதங்களை பின்வரும் விகிதங்களின் அடிப்படையில் மாற்றியமைக்கலாம் என பரிந்துரைக்கப்படுகிறது.

**உத்தேசிக்கப்பட்டுள்ள நிறுமம் வரி புதிய விகிதங்கள்**
**(பதிவாளர் அலுவலகத்தில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில்)**
**(சென்னை மாநகராட்சி எல்லைக்குள் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் நிறுவனங்கள்)**

| வ. எண். | முதலீடு தொகை (இலட்சங்களில்) | பதிவுசெய்த நிறுவனங்களின் எண்ணிக்கை | உத்தேசிக்கப்பட்டுள்ள அரையாண்டு நிறுமம் வரி |
|---|---|---|---|
| 1. | ஒரு இலட்சத்திற்கு குறைவாக (ரூ.99,999க்குள்) | 2304 | ரூ.500/– |
| 2. | ரூபாய் 1,00,000 முதல் ரூபாய் 1,99,999 வரை | 16459 | ரூ.1,000/– |
| 3. | ரூபாய் 2,00,000 முதல் ரூபாய் 2,99,999 வரை | 1263 | ரூ.1,500/– |
| 4. | ரூபாய் 3,00,000 முதல் ரூபாய் 4,99,999 வரை | 1064 | ரூ.2,500/– |
| 5. | ரூபாய் 5,00,000 முதல் ரூபாய் 9,99,999 வரை | 3460 | ரூ.5,000/– |
| 6. | ரூபாய் 10,00,000 முதல் ரூபாய் 19,99,999 வரை | 2264 | ரூ.10,000/– |
| 7. | ரூபாய் 20,00,000 முதல் ரூபாய் 29,99,999 வரை | 1248 | ரூ.15,000/– |
| 8. | ரூபாய் 30,00,000 முதல் ரூபாய் 39,99,999 வரை | 520 | ரூ.20,000/– |
| 9. | ரூபாய் 40,00,000 முதல் ரூபாய் 49,99,999 வரை | 482 | ரூ.25,000/– |
| 10. | ரூபாய் 50,00,000 க்கு மேல் | 5196 | ரூ.30,000/– |
| | மொத்தம் | 34260 | |

**(சென்னை மாநகராட்சி எல்லைக்கு வெளியே தலைமையிடம் அமைந்து**
**சென்னையில் இயங்கும் கிளை நிறுவனங்கள்)**

| வ.எண். | நிறுவனத்தின் மொத்த வருமானம் | அரையாண்டுக்கு செலுத்த வேண்டிய நிறுமம் வரி |
|---|---|---|
| அ. | ரூ.5,00,000/–க்கு மிகாமல் | ரூ.500/– |
| ஆ. | ரூ.5,00,001/– முதல் ரூ.10,00,000/– வரை | ரூ.1,000/– |
| இ. | ரூ.10,00,001 /– முதல் ரூ.20,00,000/– வரை | ரூ.2,000/– |
| ஈ. | ரூ.20,00,000/–க்கு மேல் | ரூ.2,000/– மற்றும் 20,00,000/–க்கு மேல் கூடுதலாக உள்ள தொகைக்கு ஒவ்வொரு 1,00,000/–க்கும் ரூ.500/– வீதம் அதிக பட்சம் ரூ.30,000/– |

இருப்பினும் ஒரு நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அல்லது முதன்மை அலுவலகம் சென்னை மாநகரில் இல்லாமல் இருந்தாலும் சென்னை நகரில் இயங்கும் கிளை நிறுவனத்திற்கு முதல் ஆண்டிற்கு நிறுமம் வரி ரூ.500/– செலுத்தப்பட வேண்டும். ஆனால் அந்நிறுவனத்தின் மொத்த வருமானம் அந்த ஆண்டில் ரூ.5,00,000/–க்கு மிகையாக இருப்பதாகக் கண்டறியப்பட்டால் அந்நிறுவனம் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விகிதத்தின்படி முதலில் செலுத்திய ரூ.500/–ஐ கழித்து மீதமுள்ள தொகை செலுத்த வேண்டும்.

எனவே, பல ஆண்டுகளாக திருத்தம் செய்யப்படாமல் உள்ள நிறுமம் வரியினை, 2012–13 நிதியாண்டின் இரண்டாம் அரையாண்டு முதல் (1.10.2012 முதல்) புதிய விகிதத்தில் நிர்ணயம் செய்து வசூலிப்பதற்கு ஏதுவாக சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919, பிரிவு–98ன்படி தமிழ்நாடு அரசிதழ் மற்றும் உள்ளூர் செய்தித் தாள்களில் வெளியிடவும், மேலும் இதுகுறித்து ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின் அவற்றை தெரிவிப்பதற்காக ஒரு மாத கால அவகாசம் அளித்து அறிவிப்பு வெளியிட நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘19.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 318/2012 நாள் 19.10.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3 /35985/2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின்12.10.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.487/2012 **பொருள் எண்.46**

## <u>பணியமைப்பு</u>

அரசாணை (நிலை) எண். 2692 பொது (சிறப்பு – அ) துறை, நாள்: 23.08.2012ன்படி, திரு. து. இளங்கோ, மாவட்ட வருவாய் அலுவலர் / சிறப்பு அலுவலர் – II (கோவில் நிலங்கள்), இந்து சமயம் மற்றும் அறநிலைய ஆட்சித்துறை, சென்னை அவர்கள், சென்னை மாநகராட்சி, மண்டலம் – 8 (அண்ணாநகர்)ல் மண்டல அலுவலராக 29.09.2012 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்காகவும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது"

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண். ஈ3 /41426/ 2012**
**ஆணையாளர் அவர்களின்12.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.488/2012 **பொருள் எண்.47**

**பணியமைப்பு**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ஆர். ஓ. சி. எண். 1080 / 2012 / சி1, நாள்: 27.09.2012 ன் படி, திரு. சி. விஜயகுமார், நகராட்சி ஆணையாளர், கடலூர், அவர்கள் சென்னை மாநகராட்சி, மண்டலம் – 4 (தண்டையார்பேட்டை)ல் மண்டல அலுவலராக 03.10.2012 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது"

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/3983/12**
**ஆணையர் அவர்களின் 11.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.489/2012 **பொருள் எண்.48**

**தமிழக சட்டப்பேரவை வைரவிழா—அலங்கார வளைவு அமைக்க அனுமதி**

தமிழக சட்டப்பேரவை தொடங்கி 60 ஆண்டுகள் நிறைவு பெற்றதை ஒட்டி வைர விழாவை கொண்டாடும் வகையில் தலைமைச்செயலகம் அருகில் இராஜாஜி சாலையில் அலங்கார வளைவு அமைக்கப்படவுள்ளது. அவ்வலங்கார வளைவு அமைக்க அனுமதி வழங்குமாறு சேப்பாக்கம், பொதுப்பணித்துறை கட்டட கட்டுமான கோட்டம்—1ன் செயற்பொறியாளர் 09.10.2012 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்காணும் அலங்கார வளைவு அமைய உள்ள இடம் மண்டலம்—5, வார்டு—60ல் ஜார்ஜ் நகர் (George-Town) கோட்டத்தில் தொகுதி எண்.102, மறு அளவை எண்.11721ல் அமைந்துள்ள மாநகராட்சி (பொது) என்னும் வகைப்பாடு உடைய நிலமாகும். அவ்விடத்தில் சட்டப்பேரவையின் வைர விழாவினை முன்னிட்டு அலங்கார வளைவு அரசு விதிகளுக்குட்பட்டு பொதுப் பணித்துறையினர் அமைத்துக்கொள்ள அவசர அவசியம் கருதி அனுமதி வழங்கியமைக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 272/ 2012 நாள் 17.10.2012—ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''19.10.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 331/2012 நாள் 19.10.2012—ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.பி10/3053/2012**

**ஆணையர் அவர்களின் 22.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.490/2012 **பொருள் எண்.49**

## ஒப்பந்தப்புள்ளி ஏற்பு

வார்டு எண் : 137 மண்டலம் : 10

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | மண்டலம்–10, வார்டு–137 நெசப்பாக்கம் சென்னை மேல்நிலைப்பள்ளியில் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் 5+5 வகுப்பறைகள், கழிவறை மற்றும் மாடிப்படி கட்டும் பணி. |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை .. / மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ.136.80 இலட்சம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2012-2013 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்பட்டி |
| நிதியின் மூலத்தன்மை | மூலதனநிதி – கட்டடத்துறை 2012-2013 |
| வார்டு குழு தீர்மான எண். மற்றும் நாள் | தீர்மானஎண்.637, நாள்14.08.2012. |

ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள். திரு / திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2010-2011 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1. | பி.திருமூர்த்தி | } ரூ.1,17,78,210.62 | } ரூ.1,27,79,358.52 | (+)8.50% அதிகம் |
| 2 | ராஜேஷ் அன்டு கோ | ரூ.1,17,78,210.62 | ரூ.1,31,91,595.89 | (+)12.00%அதிகம் |
| 3 | பியர்ல் இன்ஜினியரிங் கன்ஷ்ட்ரக்ஷன்ஸ் கோ ஆப்பரேட்டிவ் சொசைட்டி லிட் | ரூ.1,17,78,210.62 | ரூ.1,33,32,934.42 | (+)13.20%அதிகம் |
| 4 | வாஸ்கோ என்டர்பிரைஸஸ் | ரூ.1,17,78,210.62 | ரூ.1,30,73,813.78 | (+)11.00%அதிகம் |
| 5 | வி. ராமகிருஷ்ணன் | ரூ.1,17,78,210.62 | ரூ.1,28,38,249.57 | (+)9.00% அதிகம் |
| 6 | ஆர். தாமஸ் ஐயாதுரை | ரூ.1,17,78,210.62 | ரூ.1,23,60,054.22 | (+)4.94% அதிகம் |
| 7 | பூங்காவனம் கன்ஷ்ட்ரக்ஷன்ஸ் | ரூ.1,17,78,210.62 | ரூ.1,23,08,230.09 | (+)4.50% அதிகம் |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விவரங்கள் | ஆம். பேச்சு வார்த்தை நடத்தப்பட்ட நாள் 27.09.2012 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்ப விவரம் | ரூ. 1,23,08,230.09 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | திருவாளர்கள். பூங்காவனம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் |
| இறுதி ஒப்பந்தத்தொகை ரூபாய் | ரூ. 1,23,08,230.09 |
| இறுதி ஒப்ப சதவிகிதம் | (+)4.50% அதிகம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2012-2013 |

எனவே, மேற்குறிப்பிட்ட பணிக்கு குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். பூங்காவனம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்அவர்களின் ரூ.1,23,08,230.09 க்கான அதாவது 2012-13ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+)4.50% அதிகமான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்ப பணியை அவர்களுக்கு அளிக்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் **17.10.2012** அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு **26.10.2012** அன்று தீர்மான எண்.**283/2012**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டம் **19.10.2012** அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு **26.10.2012** அன்று தீர்மான எண்.**340/2012**–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>பா.து.ந.க.எண்.பி3/797/2012</u>**

**<u>ஆணையர் அவர்களின் 25.10.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.491/2012 **பொருள் எண்.50**

**<u>மண்டலம் – 10, வார்டு – 134(ம)136ல் ரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவில் பாதசாரிகள் மற்றும் இருசக்கர வாகனச்சுரங்கப்பாதை அமைக்கும் பணி ரூ.1,74,00,000/–க்கான மதிப்பீட்டிற்கு அனுமதி</u>**

| | | |
|---|---|---|
| 01. பணியின் பெயர் | : | மண்டலம் – 10, வார்டு – 134(ம)136ல் ரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவில் பாதசாரிகள் மற்றும் இருசக்கரவாகனச் சுரங்கப்பாதை அமைக்கும் பணி. |
| 02. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | பாலங்கள் துறை |
| 03. சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | பாலங்கள் துறை |
| 04. தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் நாள் | : | தொ.நு.அ.எண்.02/2012–2013 தலைமைப் பொறியாளர்/க(ம) பா நாள். 25.10.2012. |
| 05. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2012 – 13 |
| 06. மதிப்பீட்டின் தொகை | | |
| (அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ.1,08,29,315.49 |
| (ஆ)சேவைத்துறையின் செலவு | : | ரூ. 11,00,000.00 |
| (இ) மின்விளக்குகள் செலவு | : | ரூ. 35,00,000.00 |
| (ஈ) ஒப்ப ஏற்றச் செலவு | : | ரூ. 5,40,000.00 |
| (ஈ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 14,30,684.51 |
| மொத்தம் | : | ரூ.1,74,00,000.00 |
| 07. ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு (அ) ஒரு மீட்டருக்கு செலவு | : | –– |
| 08. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா ? | : | ஆம் |
| 09. மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் நாள். | : | 10வது வார்டு குழுவின் தீர்மான எண். பின்னர் பெறப்படும். |
| 10. நிதியின் மூலத்தன்மை | : | மூலதன நிதி |
| (அ) வரவு செலவு ஒதுக்கீடு பாலங்கள் மற்றும் சிறு மேம்பாலங்கள் 2012 – 2013 | : | ரூ. 23,00,00,000/– |
| (ஆ) மதிப்பீட்டிற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகை | : | ஆணையரின் நிர்வாக அனுமதி பெறப்பட்ட பின்னர் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் |
| (இ) மீதம் உள்ள நிதி (அ–ஆ) | : | |
| (ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | ரூ.1,74,00,000/– |

இச்சந்திக்கடவில் ஏற்கனவே பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மற்றும் அதன்படி கோரப்பட்ட ஒப்பத்தினை ரத்து செய்ய ஆணையர் அவர்களின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. மேலும் தற்போது இச்சந்திக்கடவில் பாதசாரிகள் மற்றும் இருசக்கர வாகனச்சுரங்கப்பாதை அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள ரூ. 1,74,00,000/– மதிப்பீட்டிற்கும் தமிழ்நாடு அரசிதழ் எண்.301, நாள்.30.10.2003ல் வெளியிடப்பட்டுள்ள தமிழக அரசின் சட்டம் எண்.9/2003, சென்னை மாநகராட்சியின் சட்டம் விதி 1919ல் விதிகள் 78 மற்றும் மன்றத்தின் தீர்மான எண்.639/2003, நாள்.21.11.2003ல் அளிக்கப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படியும் இப்பொருள் அவசியம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு நேரடியாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**மி.து.ந.க.எண்.பிமே2/8728/2012**

**ஆணையர் அவர்களின் 25.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.492/2012 **பொருள் எண்.51**

**சென்னை மாநகராட்சி – மின்துறை – சாலையில் நிறுவப்பட்டுள்ள தெரு விளக்கு கம்பங்களில் தொலைகாட்சி வடக்கயிறு (CABLE TV Wire) கடத்த சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்படும் வாடகை தொகை உயர்த்துவதற்கும் மற்றும் நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கும் அரசின் அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டி.**

சென்னை மாநகராட்சியில் கேபிள் டி.வி. விநியோகம் செய்ய அதற்கான வடக்கயிறு மற்றும் இதர தொலை தொடர்பு நிறுவனங்கள் தங்களின் வடக்கயிறு கடத்த தெரு விளக்கு கம்பங்கள் வழியாக அமைத்து பாதுகாப்பாக வைத்து பயன்படுத்தவும் அதற்காக சென்னை மாநகராட்சி வாடகை தொகை வசூலிக்க அரசாணை எண்.58, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.05.2000ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4.5.2000ல் வழங்கப்பட்ட இவ்வரசாணையின்படி சென்னை மாநகராட்சி கிலோ மீட்டர் ஒன்றுக்கு ரூ.9400/– வாடகை வசூலிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. (Over Head Cable)

12 ஆண்டுகளுக்கு முன் நிர்ணயம் செய்யப்பட்ட இந்த தொகை தற்போது குறைவாக உள்ளதாக கருதப்படுகிறது. மேலும் இது நாள் வரை இக்கட்டணம் திருத்தியமைக்கப்படவில்லை. எனவே, இதை மாற்றம் செய்து 2000ல் இருந்து ஆண்டிற்கு 10% வீதம் உயர்த்தி இவ்வருடத்தில் இருந்து ஒரு கிலோ மீட்டர் துாரத்திற்கு கேபிள் டி.வி. மற்றும் தொலை தொடர்பிற்கான வடக்கயிறு தெரு விளக்கு மின் கம்பங்கள் மூலம் கடத்த வாடகை தொகையாக ஒரு கிலோ மீட்டர் வடக்கயிறு கடத்த (single track) ரூ.29,500/–நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கலாம். மேலும் 2000ம் வருடத்திலிருந்து 2012 வரை அந்தந்த வருடம் உயர்த்தப்பட்ட தொகையிலிருந்து ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை போக மீதியுள்ள நிலுவைத் தொகையை கணக்கீட்டு மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. இதனால் மாநகராட்சிக்கு வருமானம் அதிகரிக்கும். மேலும், உயர்த்தப்பட்ட தொகைக்கான கணக்கீடு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, சாலையில் நிறுவப்பட்டுள்ள தெரு விளக்கு கம்பங்களில் தொலைகாட்சி வடக்கயிறு (CABLE TV Wire) கடத்த சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்படும் வாடகை தொகை உயர்த்துவதற்கும் மற்றும் நிலுவைத் தொகை வசூலிப்பதற்கும் மன்றத்தின் உரிய ஒப்புதலுடன் அரசு ஆணை பெற்று செயல்படுத்துவதற்கு அரசிற்கு குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**CALCULATION SHEET FOR RENTAL CHARGES FOR USING STREET LAMP POSTS**

| YEAR | RATE PER KM Rs. | DIFFERENCE TO BE COLLECTED Rs. |
|---|---|---|
| 2000 | 9400.00 | 0 |
| 2001 | 10340.00 | 940 |
| 2002 | 11374.00 | 1034 |
| 2003 | 12511.40 | 1137 |
| 2004 | 13762.54 | 1251 |
| 2005 | 15138.79 | 1376 |
| 2006 | 16652.67 | 1514 |
| 2007 | 18317.94 | 1665 |
| 2008 | 20149.73 | 1832 |
| 2009 | 22164.71 | 2015 |
| 2010 | 24381.18 | 2216 |
| 2011 | 26819.3 | 2438 |
| 2012 | 29501.23 | 2682 |
| **TOTAL** | | **20100** |

**GRAND TOTAL – Rs.9,400 + Rs.20,100 = Rs.29,500/–**

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**வ.து.ந.க.எண்.எம்4/6534/2012**
**ஆணையர் அவர்களின் 26.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.**493/2012** **பொருள் எண்.52**

**வாகன நிறுத்தும் இடங்கள் – சென்னை மாநகர போக்குவரத்து காவல் துறையினால் தேர்வு செய்யப்பட்ட இடங்களுக்கு அனுமதி.**

சென்னை மாநகர போக்குவரத்து காவல்துறை கூடுதல் ஆணையாளரது **25.10.2012** நாளிட்ட கடிதத்தில், சென்னையில் வாகன நிறுத்தம் செய்வதற்கான இடங்களை தேர்வு செய்து கீழ்காணும் மூன்று வகைகளாக பிரித்து அனுப்பபட்டுள்ளது. மேலும், இம்மூன்று வகையான வாகன நிறுத்தம் செய்யும் இடங்களுக்கு சென்னை மாநகராட்சியினால் வாகன நிறுத்தக் கட்டணம் நிர்ணயம் செய்யவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

1. மாநகராட்சியினால் வாகன நிறுத்தக் கட்டணம் பெறக்கூடியவை,
2. காவல்துறையினால் வாகன நிறுத்தக் கட்டணம் ஏதுமின்றி பொதுமக்களுக்கு அனுமதி வழங்கக்கூடியவை,
3. பிற்காலத்தில் வாகன நிறுத்தம் செய்யக்கூடிய இதர இடங்கள்.

சென்னை மாநகராட்சியினால் ஏற்கனவே இருந்த பழைய பத்து மண்டலங்களில் **145** இடங்கள் நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் பிற வாகனங்கள் நிறுத்துவதற்காக தேர்வு செய்யப்பட்டு வாகன நிறுத்தக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு TEXCO (தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம்) நிறுவனத்திற்கு வசூல் செய்வதற்கும், அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகையில் முன்னாள் படைவீரர் கழகப் பணியாளர்கள் ஊதியம் மற்றும் நிர்வாக செலவுகள் போக மீதமுள்ள தொகையில் சென்னை மாநகராட்சிக்கு **70** விழுக்காடு தொகை மற்றும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்திற்கு **30** விழுக்காடு தொகை என்ற ஒப்பந்த அடிப்படையில் மன்றத் தீர்மானம் எண்.**366/04**, நாள் **30.09.2004**ன்படி பிரித்துக் கொள்ள அனுமதி பெறப்பட்டு அவ்வப்போது காலநீட்டிப்பு செய்யப்படுகிறது.

சென்னையில் பெருகிவரும் வாகன நெரிசல்களை கருத்தில்கொண்டு பொதுமக்களின் வசதிக்காக சென்னை மாநகர போக்குவரத்து காவல்துறை கூடுதல் ஆணையாளர் அவர்களால் தேர்வு செய்யப்பட்ட குறிப்பில் குறிப்பிடப்பட்ட சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களையும் வாகன நிறுத்தம் செய்வதற்கான இடங்களாக அறிவிக்கவும், இவ்விடங்களில் சட்ட விதிகளின்படி வாகன நிறுத்தக் கட்டணம் வசூலிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஜி4/23007/2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 17.10.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.494/2012 **பொருள் எண்.53**

**<u>அரசாணை நடைமுறைப்படுத்த ஒப்புதல்</u>**

அரசாணை (நிலை) எண்.256, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 26.12.2009—ன் படி சென்னையை ஒட்டியுள்ள புறநகர் பகுதிகளான 9 நகராட்சிகள் 8 பேரூராட்சிகள் 25 கிராம ஊராட்சிகள் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு சென்னை மாநகராட்சியின் பரப்புளவு 174 சதுர கீலோ மீட்டரிலிருந்து 426 சதுர கிலோ மீட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டது. நிர்வாக வசதிக்காக 155—லிருந்து 200 கோட்டங்களாக மறு சீரமைக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதால் 10 மண்டலங்களிலிருந்து 15 மண்டலங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சியில் வடக்கு, மத்திய மற்றும் தெற்கு வட்டார அலுவலகங்கள் அமைக்கப்பட்டு அதனை நிர்வகிக்க இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

28.01.2010 நாளிட்ட மன்றதீர்மான எண்.47/2010ன்படி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் நிர்வாகம் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளும் பொருட்டு, புதிய பணியிடங்களை தோற்றுவிக்கவும், ஏற்கனவே, இருந்த பணியிடங்கள் தேவையில்லா பதவிகள் என ஒப்புவிக்கவும் மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சென்னை மாநகராட்சி அலுவலக கடித எண்.பொ.து.ந.க.எண்.ஜி4/5226/2007 நாள் 19.01.2010ல் அரசுக்கு ஒப்புதல் கோரி முன்மொழிகள் அனுப்பப்பட்டது.

25.07.2012 நாளிட்ட மன்ற தீர்மானத்தின்படி சென்னை மாநகராட்சி பகுதிகளில் வளர்ந்துவரும் தேவைகளை கருத்தில் கொண்டும், மாநகராட்சி மூலம் பொது மக்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் உடனுக்குடன் அவர்களை சென்றடையவும், சென்னை மாநகராட்சியால் ஏற்படுத்தப்படும் திட்டங்கள் உடனுக்குடன் செயலாக்கம் பெறுவதற்கும், மாநகராட்சியின் பல்வேறு இன்றியமையா பணிகளை மேற்கொள்வதற்கும் ஏதுவாக 2405 காலியாக உள்ள பணியிடங்கள் நிர்வாக நலனை முன்னிட்டு, பூர்த்திசெய்து கொள்ளவும், அவசியமில்லாத 969 பணியிடங்களை ஒப்புவிக்கவும், சென்னை மாநகராட்சியில் நிர்வாக சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளும் பொருட்டும், மாநகராட்சி 10 மண்டங்களிலிருந்து 15 மண்டலங்களாகவும் புதியதாக 3 வட்டார துணை ஆணையர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்ட நிலையில் இவ்வலுவலகங்களில் பணிபுரிய வேண்டிய அலுவலர் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை குறித்து நியாயமான மதிப்பீட்டுடன் நிர்ணயம் செய்து, கூடுதலாக 958 பணியிடங்கள் வேண்டி இம்மாநகராட்சி கடித எண். பொ.து.ந.க.எண். ஜி4/23007/2012 நாள்.25.01.2012ல் அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டது. பின் மன்றத்தின் பின்னேற்பு எண்.286/2012, நாள்.25.07.2012 பெறப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது.

மன்றத்தின் பின்னேற்பு பெற்று அனுப்பப்பட்ட மாநகராட்சி பிரேரணையின் தொடர்சியாக 14.10.2012 நாளிட்ட அரசாணை எண். 95 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை சென்னை மாநகராட்சியில் கூடுதலாக கேட்கப்பட்ட 958 பணியிடங்களுக்கு 784 பணிடங்களை மட்டும் கூடுதலாக அளித்து அதனை நடைமுறை விதிகளின்படி நிரப்பிக்கொள்ளவும், அரசாணை எண்.96 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறையின்படி சென்னை மாநகராட்சியில் காலியாக உள்ள பணியிடங்களில் 2405 பணியிடங்களை நிரப்பிக்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்ட அரசாணைகளின்படி கூடுதலாக அறிவிக்கப்பட்ட 784 பணியிடங்கள் மற்றும் காலியாக உள்ள 2405 பணியிடங்களை நிரப்பவும் ஆக மொத்தம் 3189 பணியிடங்களை நிரப்பிட இவ்வரசாணைகளை சென்னை மாநகராட்சியில் செயல்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதற்கு நியமனக்குழு அனுமதி அளித்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பே.சா.து.ந.க.எண்.பி1/3562/2012**
**ஆணையர் அவர்களின் 27.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.495/2012 **பொருள் எண்.54**

சென்னை மாநகராட்சி – சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் (Chennai Mega City Development Mission) – சென்னை மாநகரிலும் மற்றும் விரிவாக்கப்பகுதிகளிலும் – ஒருங்கிணைந்த சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின் மூலம் – உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.366.23 கோடியிலான திட்ட மதிப்பீட்டிற்கும், விரிவாக்கப்பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு உபகரணங்கள் / வாகனங்கள் கொள்முதல் மற்றும் புதிய குப்பை மாற்று நிலையங்கள் அமைக்க ரூ.42.08 கோடியிலான திட்ட மதிப்பீட்டிற்கான அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.14.10.2012ஐ சென்னை மாநகராட்சியில் நடைமுறை படுத்த அனுமதி.

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக அரசாணை எண்.(2டி) எண்.100, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.15.10.2011 மூலமாக ''சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்'' என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை 2011–12 ஆம் நிதி ஒதுக்கீட்டில் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை நகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் மற்றும் ஒருங்கிணைந்த சாலைகள் மேம்படுத்தும் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு முதற்கட்டமாக ரூ.333.27 கோடியில் 175.36 கி.மீ. நீளமுள்ள 360 சாலைகள் 8 விரிவாக்கப்பட்ட மண்டலங்களில் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பணிகளை 31 சிப்பங்களாக பிரித்து ஒப்பம் இறுதி செய்து பணி ஆணை வழங்கப்பட்டு 264 சாலைகளில் பல்வேறு நிலைகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது 2012–13 ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலும் மற்றும் சென்னை விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த சாலைகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள திட்டம் உருவாக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கும் குழுவின் ஒப்புதல் பெற அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அவற்றில் சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், தெருக்கலன்கள் மற்றும் சேவைத் துறையினரின் வடங்கள் கொண்டு செல்ல Duct அமைப்புகள் ஆகியவை அடங்கும். இதில் 1 முதல் 15 மண்டலங்களில் 280.83 கி.மீ. நீளமுள்ள 1189 சாலைகளை ரூ.366.23 கோடியில் மேம்படுத்தவும், மேலும் விரிவாக்கப்பகுதி மணடலங்களில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கென 180 எண்ணிக்கையிலான உபகரணங்கள் / வாகனங்கள் கொள்முதல் செய்ய ரூ.42.08 கோடியிலும், 6 இடங்களில் புதிய குப்பை மாற்று நிலையங்கள் கட்டுவதற்காக ரூ.18.70 கோடியிலும், ஆக மொத்தம் ரூ.427.01 கோடியில் மேற்கொள்ள அவற்றிற்கான நிர்வாக ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.427.01 கோடிக்கு அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.14.10.2012ல் வழங்கியுள்ளது.

## ஒப்புதல் பெறப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சாலைகள் திட்டத்தின் சுருக்கம்

| வ. எண். | மண்டல எண். | மண்டலத்தின் பெயர் | சாலைகளின் எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | மதிப்பீடுத் தொகை (ரூபாய் லட்சத்தில்) | | | | | | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | சாலைகள் | மழைநீர் வடிகால்வாய் | நடைபாதை | மின்வட கால்வாய் (cable duct) | தெரு விளக்கு | சாலைக் சாலைக் கலன்கள் | |
| 1 | I | திருவொற்றியூர் | 55 | 12.69 | 1274.50 | 1442.94 | 387.69 | 725.60 | 99.28 | 79.48 | 40.10 |
| 2 | II | மணலி | 3 | 2.86 | 368.50 | 544.17 | 46.82 | _ | 40.66 | 7.14 | 10.07 |
| 3 | III | மாதவரம் | 35 | 8.54 | 937.88 | 692.56 | 79.00 | 98.58 | 94.55 | 103.52 | 20.06 |
| 4 | IV | தண்டையார்பேட்டை | 116 | 31.56 | 1216.62 | 677.91 | 137.59 | 93.27 | 40.17 | 71.32 | 22.37 |
| 5 | V | இராயபுரம் | 103 | 28.71 | 838.76 | 14.70 | 342.41 | 523.24 | 125.09 | 54.34 | 18.99 |
| 6 | VI | திரு.வி.க.நகர் | 24 | 7.61 | 327.10 | 121.09 | 326.70 | 276.22 | 34.45 | 115.22 | 12.01 |
| 7 | VII | அம்பத்தூர் | 65 | 14.31 | 781.85 | 1844.84 | 113.07 | 51.91 | 133.85 | 70.44 | 29.96 |
| 8 | VIII | அண்ணா நகர் | 327 | 64.67 | 2254.74 | 10.48 | 479.75 | 77.68 | 83.12 | 78.55 | 29.85 |
| 9 | IX | தேனாம்பேட்டை | 33 | 6.44 | 234.38 | 364.59 | 292.28 | 7.63 | _ | 15.83 | 9.15 |
| 10 | X | கோடம்பாக்கம் | 41 | 9.45 | 323.97 | 157.02 | 131.61 | 20.90 | 21.86 | 24.44 | 6.80 |
| 11 | XI | வளசரவாக்கம் | 37 | 17.36 | 1655.22 | 2757.00 | 230.30 | 249.18 | 179.61 | _ | 50.71 |
| 12 | XII | ஆலந்தூர் | 69 | 18.11 | 1806.47 | 471.31 | 561.44 | _ | 115.45 | 125.39 | 30.80 |
| 13 | XIII | அடையாறு | 32 | 10.82 | 243.88 | 376.80 | 336.54 | 274.19 | 39.26 | 59.33 | 13.30 |
| 14 | XIV | பெருங்குடி | 56 | 18.52 | 1548.39 | 2214.74 | 328.76 | 572.66 | 141.59 | 102.13 | 49.08 |
| 15 | XV | சோழிங்கநல்லூர் | 193 | 29.18 | 1678.73 | 103.19 | 244.13 | _ | 238.58 | 33.69 | 22.98 |
| | | மொத்தம் | 1189 | 280.83 | 15490.99 | 11793.34 | 4038.09 | 2971.06 | 1387.52 | 940.82 | 366.23 |

## விரிவாக்கப்பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கான உபகரணங்கள் / வாகனங்கள் கொள்முதல் சுருக்கம்

| வ. எண். | பணியின் விவரம் | வாகனங்கள் / உபகரணங்கள் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை ரூ.கோடியில் |
|---|---|---|---|
| 1 | பெரிய காம்பேக்டர்கள் – 14 கன மீ கொள்ளளவு | 43 | 11.18 |
| 2 | சிறிய காம்பேக்டர்கள் – 6 கன மீ கொள்ளளவு | 45 | 8.10 |
| 3 | ஹாலேஜ் டிப்பர் லாரிகள் – 18 கன மீ கொள்ளளவு | 22 | 5.94 |
| 4 | ஹைட்ராலிக் எக்ஸ்கவேட்டர் உபகரணம் கிராப்ளர் இணைப்புடன் | 9 | 5.04 |
| 5 | கனரக டிப்பர் லாரிகள் | 15 | 2.25 |
| 6 | முன் பளு தூக்கி இயந்திரங்கள் Back Hoe இணைப்புடன் | 11 | 2.64 |
| 7 | ஸ்கிட் ஸ்டியர் லோடர்கள் | 27 | 4.05 |
| 8 | பெரிய மெக்கானிக்கல் ஸ்வீப்பர்கள் | 8 | 2.88 |
| | மொத்தம் | 180 | 42.08 |

விரிவாக்கப்பகுதிகளில் புதிய குப்பை மாற்று நிலையங்கள் அமைக்க அனுமதித்துள்ள இடங்கள் சுருக்கம்.

| வ.எண். | குப்பை மாற்று நிலையம் அமைக்கப்டும் இடம் | புதியதாக இணைக்கப்பட்ட மண்டலம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | மணலி | I & II | 4.00 |
| 2 | கில்பார்ன் நகர், மாதவரம் | III | 3.10 |
| 3 | அத்திப்பட்டு, அம்பத்துார் | VII | 2.50 |
| 4 | வளசரவாக்கம் | XI | 2.90 |
| 5 | பள்ளிக்கரனை (ஆலந்துார், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லுார்) | XII | 3.10 |
| | | XIV & XV | 3.10 |
| | மொத்தம் | | 18.70 |

ஆக மொத்தம் ரூ.427.01 கோடிக்கு ஒப்புதல் அளித்து அரசாணை பெறப்பட்டுள்ளது. அதற்கான விவரம் பின்வருமாறு.

| வ. எண். | திட்டங்கள் | மதிப்பீட்டுத் தொகை ரூ. கோடியில் |
|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த சாலைகள் | **366.23** |
| 2 | உபகரணங்கள் / வாகனங்கள் | **42.08** |
| 3 | குப்பை மாற்று நிலையங்கள் | **18.70** |
| | மொத்தம் | **427.01** |

மேற்காணும் அரசாணை (நிலை) எண்.**94**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**14.10.2012**ஐ சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்திட, நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் **17.10.2012** அன்று கூட்டம் முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு **27.10.2012** அன்று தீர்மான எண்.**285/2012**—ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

> ''ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டம் **19.10.2012** அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு **27.10.2012** அன்று தீர்மான எண்.**342/2012**—ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******